981

பரப்பிரம்ம நம:

சந்தேகந் தெளிதலெனும் தத்வானந்த மெய்ஞ்ஞான வைபூதிவிளக்கம்

30 AUG 1927

2186

R6
N22
175891



மௌன சுவாமிகள்.

பரப்பிர்ம்ம நம:

சந்தேசந்தெளிதலெனும் தத்வானந்த மெஞ்ஞான

அனுபூதி விளக்கம்

30 AUG 1922

இஃது.

மதுரை ஜில்லா பேலூர் தாலூகா

கருங்காலக்குடி கிராமத்தில் எழுந்தருளியிருக்கும்

மௌனசுவாமிகளால்

இயற்றப்பெற்று

ஷை ஊர் லெ. மு. பெ. பெரியநாயகி அம்மாள்

பொருளுதவியைக்கொண்டும்.

ஷை தாலூகா சொக்கலிங்கபுரம்

M. பொன்னுச்சாமி அய்யங்காரவர்கள்

பொருளுதவியைக்கொண்டும்.

நத்தம் R. ஸ்ரீனிவாசய்யங்காரவர்கள்

வேண்டுகோளின்படி

மதுரை N. சுப்பையா செட்டியார்

இம்பீரியல் பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

முதல் பதிப்பு 500. 1922

600 00
125891
R8
N22

பரப்பிர்ம்ம நம:

30 AUG 1922

இந்நூலை வாசிக்கும் பக்த சிரோன்மணிகள் எல்லோருக்கும் இந்நூலருளினவனை அறிவித்துக்கொள்ளும் விக்ஞாபனம்.

எழுத்து இசை தவறிய சிற்குற்றங்களிருந்தபோதிலும் கவனியாது எளிய பதங்களால் அமைக்கப் பெற்றிருந்தபோதிலும் அதனுள் அமைந்திருக்கும் பொருளைக் கவனித்து தானே தன் மனதின் விசாரணையால் தெரிந்து யாதாபொருவர் 36 தத்துவங்களைத் தெரிந்து அதன் வழி தான் செல்லாது தடுத்து அதி தீவிரபக்குவர்களாவதுடன் இந்நூல் பிர்மம நிஷ்டைக்கு சமீபத்தில் வந்திருப்பவர்களுக்கும் சொல்லாமற் சொல்லிய மெஞ்ஞான அனுபூதி விளக்கம் சத்தியம். சத்தியம் இங்கனம் காண்க மௌனவாக்கியம்.

பரப்பிர்ம்ம நம:

———

அபிப்ராயம்.

இந்நூலருளிச்செய்திரா நின்ற மௌனசுவாமிகள். மதுரை ஜில்லா மேலூர்த் தாலூகா கருங்காலக்குடி கிராமத்தில் 3-வருஷமாயிருந்து வருகிறார் எங்களுக்கு நன்றாய்த் தெரியவரும் நாளது தேதி வரை சுவாமிகளை எங்களுக்குத் தெரிந்தது முதல நாளது வரை வாக்குத் தொனிக்க பார்த்ததுமில்லை கேள்வியுமில்லை இந்நூல் ஷெ சுவாமிகள் திருக்கரத்தாலேயே எழுதி முற்று பெற்றதெனை காண்கவும்.

கருங்காலக்குடி கிராமம்.
L. M. B. எஸ்டேட்,
பெரிய நாயகி அம்மாள்.

M. பொன்னுச்சாமி அய்யங்கார்.
சொக்கலிங்கபுரம்,
மதயானைப்பட்டி கிராமம்,
வில்லேஜ் மாஜிஸ்ட்ரேட்

பக்கம்	பாட்டு	வரி	பிழை	திருத்தம்
3	2	3	முத்தினத்தத்துவ	முத்தினதத்துவ
3	2	4	மத்திமுத்தி	மத்திலுமுத்தி
4	2	12	வைத்தெனே	வைததெந்தனை
5	3	12	க்ஷனத்தில்	க்ஷணத்தில்
6	3	3	வென்றவன	வென்றவன்
8	3	6	நிட்ப்பம்	நிட்பம்
9	3	14	நகாத்தை	நகரத்தை
11	3	4	பெரியோர்ள்	பெரியோர்களால்
14	4	2	யிருப்பதையும்	யிருப்பதையும்
14	4	3	ஆஞ்றசு	ஆறஞ்சு
18	22	2	நிஷ்திரிகை	நிஷ்கிரிகை
22	37	2	வெள்ளுமடி	வெல்லுமடி
25	50	4	களங்கி	கலங்கி
33	78	1	மௌாஎ மௌான	மௌன மௌன
35	88	2	குதக்கங்கள்	குதர்க்கங்கள்
40	9	3	பிற்	பிர்
47	11	2	அவித்கியாகவே	அவித்தையாகவே
48	16	1	நிஷ்கிரிகை பொட்டு	நிஷ்கிரிகை மை பொ
53	1	10	சாப்பிட்	சாப்பாட் [ட்டு
62	2	1	முப்த்தாறுய்	முப்பத்தாறுய்

அட்டவணை.

செய்யுளின் லக்கம்.	செய்யுளின் பெயர்.	பக்கம்.	செய்யுளின் தொகை.
1	குருவணக்கம்.	1	6
2	ஷை கீர்த்தனை.	3	4
3	வசனம்.	5	
4	சத்திய நிலை.	12	96
5	சீடனுக்குறை பதி	37	34
6	முமூட்சுகளு தெரிவிப்பது.	46	17
7	வசனம்.	49	
8	மெஞ்ஞானக் கும்மி.	56	23
9	சொரூப அனுபூதி.	62	18
01	தேசிகனருள் விருப்பம்.	71	7
11	ஆசிரிய விருத்தம்.	72	8
12	தேசிகனருள் விருப்பம்.	73	36
13	தாலாட்டு.	79	50
14	நிஷ்டை விபரம்.	87	8
15	சொரூப நிஷ்டை கூடும் விதம்.	89	9
16	அதுவுமிது.	91	14
17	வஸ்துவானந்த புகள்ச்சி.	93	9
18	பதம்.	95	10
19	பதம்.	97	5
20	தேசிகனருள் விருப்பம்.	98	4
21	தேசிகனருள் விருப்பம்.	100	4
22	ஆனந்த களிப்பு.	102	8
23	ஆனந்த களிப்பு.	104	14
24	ஆனந்த களிப்பு.	106	5
25	தானான அத்துவித புகள்ச்சி.	107	24
26	ஆசிரிய விருத்தம்.	112	12
27	வெண்செந்துறை.	114	6
28	அதுவுமிது.	116	7
29	பெருமை கூறல்.	118	28

பரப்பிர்ம்மநமு:

சந்தேகந்தெளிதலெனும் தத்வானந்த மெஞ்ஞான அனுபூதி விளக்கம்.

குரு வணக்கம்.

அருள் கொடுத்திருளை யோட்டி அகர முதலோ ரெழுத்தாய் பொருள் பலவாய் இங்கங்கெங்குமாய் தோன்றி நின்று சொருபமாய் வந்தென்னை பொருள் தானாய்ச் செய்துவைத்த குருபரன் மலர்த்தாழினைக் குடியெனக் கொண்டுவாழ்வோம்.

போய்வருவாயனுமானே என்ற மெட்டு.

இராகம் பைரவி தாளம் ரூபகம் கேண்டஜாதி நடை

தேசிகன்தாள் பணிந்தேனே

சித்திரத்திருவடிகள் உத்தமவழிப்படிகள் (தே)

தேனூறிர்தப்பதமொழி ஞானேதயப்புதுவழி ()

திரிபத்தார்தத்துவத்தை அறிவித்த பக்தமுத்தர் ()

1. காசியில்நானென்ற கர்வமறுத்தவர்
கலைக்ஞானம்பாவையும் கருத்திலிருத்தவர்
வீசிடும்மாய்கையை வெட்டியெறித்தவர்
வெட்டப்பெருவெளிதனை யறிந்திட்டத்திரு
குருபரனெனும் (தே)

2. முக்குணசுத்தராம் மும்மலமற்றவர்
மோனசிகாமணி ஞானமேயுற்றவர்
பக்குவசீடனெனக் குறைத்திட்டவர்
பரிபூரண கிருபாகர திருமாமறை யறிந்தேகிய ()

3. தித்திக்கும் தேன்மாரி தினம் பொழிமாவேரி
தீவிரபக்குவர்க்குப தேசிக்குமுபகாரி
சித்தியாய்வாழ்மௌன தேசிகருணசூரி
திருவளர்புயபுனிதன்சுய உருவொருகணமற
விலாத் (தே)

பரப்பிர்ம்ம நம:

காந்திமகான் போலுண்டோ என்ற மெட்டு

இராகம் தேசிக தோடி தாளம் சதுரச்சா ஜாதி ஏகம்

ஞானோ தயக்குருவே நாளும்
நம்பினே னே (ஞா)

ஞானரத்தின முத்தினத்தத் து வ
மத்திமுத்தி யிருத்திடுமுத்தம (ஞா)

மோனகுரு நாத ன்
மோக்ஷப்பிர சாத ன்
மூமூட்சுகளுக்காக-சுகபோக-மதியூக-ப்ரவாக-வெள்ளம்

முதிர்ந்திலங்கு பகாரன் உள்ளம்
பதிந்தொழுகு நல்வீரன் நல்
முத்திக்கொருவித்தாகிய-சித்தத் துதிக்தாடிய
முத்திரத்தினம் வைத்தழுத்திய-பத்திராக்ஷக மாலே
யணிந்திடு (ஞா)

தோகையரா.

நிர்விகற்பசமாதியிலே நெடுங்காலமிருந்த மோன
சேரிலாத சிகாமணி ம்யே
சிற்பரசின் மயமே சிவயோக தயாநிதியே
சிறியேனுக்கருளினியே

பாட்டுத்தொடர்.

சேவடி போற்றி
சேவித் தேனேற்றி என்
சிந்தையினின்நல்லுறவாய் என்று மறவா-அருள்புரிவாய்
பதந்தருவாய் மஹா
தெரிய பக்தர்கள் வாழும் மா
வேரிவாசமென்னுழும் செயும்
தேசிகன்பேரிரு லோகமுன்னேறிடு
சித்தம் வைத்தெனை நித்தமுகந்தருள் (ஞா)

பாப்பிர்ம்ம நம:

வசனம்.

ஆதிமுதல் அந்தம்வரை சிருஷ்டி செய்யப்பட்ட 84 லக்ஷ ஜீவராசி பேதங்களும் ஆகாயமும், பூமண்டல மும் சப்த சமுத்திரங்களும் சூரியன் சந்திரன் நக் ஷேத்திரங்கள் மேகங்கள் மழைபெய்வது இடிவிழுவது மின்னுவது ஆகாயத்தில் சப்திப்பது இராப்பகலுண் டாவது இன்னும் உலகத்தில் கண்ணுக்குத் தோற்று ஒவ்வொரு வஸ்த்துகளும் ஒவ்வொரு மனுஷிய ஜீவன் களும் ரூப பேதமாகத் தோற்றுவதும் ஒவ்வொரு வஸ் துவும் அழிவது போலவும் அழிந்தால் மருபடி தோற் றுமலிருப்பது போலவும் புதிதாய் உண்டாவது போல வும் சில எப்போதும் இருந்தபடியே இருக்கிறதாகவும் கண் பார்வைக்கு தோற்றியும் ஒரு க்ஷணத்தில் மனுஷி யாளும் அழிகிறார்கள். ஆஹா இதென்ன! மாயா கற் பிணை தோற்றமாயிருக்கிறது!! இதன் ரகசியம் யாது இந்த மகா சூட்சமத்திலும் சூட்சமாயிருக்கிற இவை களை எல்லாம் இப்படிசெய்ய அவசியம் ஒன்றிருக்கத் தானே வேண்டும் இல்லாவிடில் எப்படி நடைபெறும் எனக்கவனித்து இதனைத்தெரியும் அறிவே பேரறிவு

இதனையறிந்த புருஷனே புருஷன் எனசப்திக்கும் சத்தத்திற்கு உடயன் எனத்தெரிகிறது இந்த மாயா கற்பனையை வென்றவண் வீறமே வீறம் என ஒவ்வொரு மனுஷியாளும் தெரிந்திருந்த போதிலும் உண்மையாகக் கவனித்தவர்களல்லர் ஒருக்கால கவனித்திருக்கலாம் அப்படிக்கவனித்து யாதொரு சந்தேக விபரீதமன்னியில் தன்னைத்தெரிந்துதான் தானே யாவுமாய் இல்லாமையுமாய் ஞானமெனும் மெய்யறிவை யடைந்து அதன்படி வழுவாது இருப்பவர்களைக் குறித்தும் தேகமே நானென்ற அபிமானத்துடன் நான், என், நீ, அவன், இவன், அவள், அது, இது, என்னுடையது உன்னுடையது என் பெண்சாதி என் புத்திரர்கள் என் தகப்பன் நான் இன்னனுக்கு மகன் என் வீடு என் மாடு என் வேலைக்காரர்கள் நானே சகலத்தையும் சம்பாதித்தேன் நான் வியாபாரி நான் உத்தியோகஸ்தன் நான் செட்டி நான் பிருமணன் நான் சைவன் நான் ஸன்யாசி காஷாய ருத்திராக்கங்களைத் தரித்தவன் நான் வானபிரஸ்த்தன் நான் யோகி நான் ஞானி நான் பிர்ம்மச்

சாரி நான் பிரசங்கிப்பவன் நானே என் தாய் தந்தைக ளேயும் பந்துக்களேயும் ரக்ஷிக்கிறவன் நான் இல்லா விடில் இவர்கள் யாதொரு கெதியுமில்லாது போவார்க ளென்று சொல்லியும் அதனால் விளேகின்ற துன்பங் களே இன்பமாகக்கொண்டு உழலும் மாயா மயக்கமு டையவர்களேக் குறித்தும். இந்த நூல் கூறப்படவில்லே பின் எப்பேர்ப்பட்டவர்களுக்கு சொல்லப்பட்டதென் றால் மேல் சொல்லிய 84 லக்ஷ ஜீவராசிகளேயும் சிருஷ் டித்தும் ரக்ஷித்தும் அழிப்பதுமான தெய்வம் ஒன் றுண்டென யாவர் மனுஷியாளும் சொல்லவும் சம்ம திக்கவுமாயிருக்கிறார்களே அதன் ரகசியம் யாது. அத் தெய்வந்தான் எப்படி. உளது எங்கே எம்மாதிரியாய் வசிக்கும் தவிரவும் நான் நானென்று சகல மனுஷியா ளெல்லோரும் ஒவ்வொரு மாமிச பிண்டமாகிய நறம்பு தோல் இரத்தம் ரோமம் எலும்பு புழு மல ஜலங்க ளால் நிறம்ப அமைக்கப்பட்டுள்ள சரீரத்தையே நான் என்று அபிமானமாக நினேத்து சொல்லுகின்றார்களே இருக்கட்டும் நாம் இதனே விசாரிப்போம் இது என்ன

என் கை என் விரல் என் கண் என் தலை என் காது என் முகம் என் மூக்கு என் பற்கள் என் நாக்கு என் கால் என் புத்தி என் சித்தம் என் கோபம் என் மனம் என் ஜீவன் என் ஆத்மா இப்படியே சொல்லிக்கொண் டால் என் என் என்று இதுவரை சொல்லிக்கொண்ட தெது ஆஹா இது என்ன மஹா நுட்பம் நான் என் பது என்ன இதைக்கவனிக்கும்போது இச்சரீரத்தை விட நான் என்பது வேறல்லவாதெரிகிறது இப்பொ ழுது நான் என்று சொல்லிக்கொள்வதே மிகவும் கேவ லமாயிருக்கிறது இருக்கட்டும் தீர்க்க விசாரிப்போம் இன்னும் நம் தாய் தந்தையரையும் மற்றவர்களையும் ஒரு பொருட்டாக நினைத்திருக்கின்றோமே அவர்க ளையும் சற்று விசாரிப்போம் நம் தாய் வயற்றிலிருந்து ஜெனித்த பின்னரே சில காலம் சென்று விபரம் தெரி ந்த பின் தாயும் தந்தையும் சையோகப்பட்டபடியால் நாம் உற்பத்தியாகி ஜெனித்ததாக மற்ற மனுஷி யாள் சொல்ல விபரம் தெரிந்தோம் இருக்கட்டும் நாம் பிறவா முன்னமே எங்கே எப்படியிருந்தோம் எனத்

தெரிய வருகிறதா அதுவும் தெரியவில்லை நாம் தாய் வயிற்றள் ஜெனித்தபின் தெரியவந்ததா அதுவும் தெரியவில்லை இருக்கட்டும் இன்னும் பிரியாள், சகோதரர், சகோதரிகள், புத்திரர்கள் மற்ற சிநேகிதர்களும் சிலர் முன்னும் பின்னுமாய் வந்தவர்களா யிருக்கிறார்கள் ஓகோ நாம் ஜெனித்தபின் சிலகாலம் சென்றபின்னரே தெரியவந்ததென்றால் நாம் உற்பத்தியாவதற்கு முன் எப்படி தெரியவரும் இதென்ன சிச்சி வீணை யோசனை இப்பொழுது முக்கியமாய் கவனிக்கவேண்டிய விஷயம் எதுவோ அதை விட்டு விட்டு ஒரு க்ஷண நேரத்தில் அழியும் பந்து மித்திரர்களையும் க்ஷண நேரத்தில் வருவதும் போவதுமான தனகனக பொன் பொருளையும் பற்றி விசாரிப்பது மிகவும் கேவலமாயிருக்கிறது மனுஷியாள் நகரத்தைப் பார்த்து தள், தள் என்பதுபோல் இந்த விசாரணையை தள்ளிவிட்டு எதை விசாரிக்க அவசியமோ அதனை விசாரிப்போம் இதுவரை விசாரித்ததில் நான் என்பது புரியவில்லை இன்னும் நான் என்பதை தெரிந்து தெளிவதே அவசி

யமென்றும் அதையறியும் மெய்யறிவே ஞானமென்றும் அதை தெரிவதற்கு ஞானத்தையடைந்தவர்கள் வேண்டுமென்றும் அவர்களே பெரியோர்களென்றும் அவர்களே குருவென்றும் இன்னும் நான்கு வேதமென்றும் சரிகை, கிரிகை, யோகம் பின்னால் ஞானத்தை அடைய வேண்டுமென்றும் அஷ்ட யோகங்களென்றும் அஷ்ட சித்திகளென்றும் ஞானத்தையடையாவிட்டால் பிறப்பு இறப்பு உண்டென்றும் பாவ புண்ணிய முண்டென்றும் மோக்ஷமென்றும் நரகமென்றும் சுவர்க்கமென்றும் அநேக மதபேதக முண்டென்றும் பலவிதமான ஜாதி வித்தியாச முண்டென்றும் மோக்ஷம் அழியாததென்றும் மோக்ஷத்தை தெரிந்து அடைந்தவர்கள் பிறப்பதில்லையென்றும் மோக்ஷமடையாதவர்கள் பிறப்பார்களென்றும் இவைகளை தெரிவதற்கு ஸன்யாசமென்றும் ருத்திராக்ஷம் காஷாயம் தலையில் ரோமம் வளர்ப்பது தலையின் ரோமத்தை எடுத்து விடுவதும் இன்னும் அநேக வேடங்களைத் தரித்துக்கொள்வதும் ஞானத்தையடைந்த பெரியோர்கள் எப்படியிருப்பார்களென்

றும் அஷ்டவித யோகங்களில் சிவராஜயோக மார்க்கந் தான் நல்ல வழியென்னும் மவுனம் என்று வாயால் மொணிப்பதை விட்டு விட்டும் இன்னும் மௌனம் நான்கு விதமென்றும் பெரியோர்கள் சொல்லப் பட்டிருப்பதாலும் இல்லறம் துறவரம் இரண்டும் மேன்மையே என்றும் இல்லறத்திலேயே ஞானத்தை யடையலாமென்றும் சொல்லியிருப்பதால் இச்சந்தேக விபரீதங்களே பந்தமென்றும் இவைகளைத் தீர்த்து மெஞ்ஞானத்தைப் போதிக்கும் ஞானமே வடிவாய் எழுந்தருளியிருக்கும் குருநாதனை யடைவதற்கு பக வானை பக்தி சிறத்தையுடன் சேவித்தும் க்ஷண நேற மாகிலும் விடாது பகவான் மீதே அன்பே ஞாபகமாய் அதிதீவிரமென்றால் சட்டி சுட்டு கை விட்டதுபோல் உலகப் பற்றுகளை விடும் பக்த சிரோன்மணிகளுக்கே இந்நூல் அருளியதெனக்காண்க. நிற்க இதைதானுக விசாரித்து 36 தத்துவங்களையும் கண்டுகளைந்து அவ் வழியில் தான் செல்லாது தடுத்து எம்மதததினேரும் எச்சாதியிற் ஜெனித்தோரும் இங்குமாய் அங்குமாய் எங்குமாய்த் தனக்குள் சாக்ஷிமாத்திரமாய் நிரைந்த பர

மாத்மாவை உண்மையுடன் பூஜித்து வந்தால் ஞான மெனும் மெய்யறிவை தெரிவிப்பதற்கு மெஞ்ஞானகுரு வருவதுடன் அஞ்ஞான மெனும் உலகப் பற்று நீங்கி முக்தி என்ற மோக்ஷகரை ஏறலாம் சந்தேகமேயில்லை மெஞ்ஞானிகளநுபூதி கூறுவர் சத்தியம். சத்தியம். சத்தியம். மௌன வாக்கியம் சதானந்தம் சத்தியம.

பரப்பிர்ம்ம நம:

சத்திய நிலை.

போய்வருவோம் வாடி புஜ

மாநகறந்தேடி என்ற தெம்மாங்கு மெட்டு

இராகம் கபாய் தளம் ஏகம் சதுரச்ச ஜாதி நடை

தோழியே நீ வாடி கம்
துரையைத் தேடி கூடி (தோ)

அருள்கொடுத் திருளையோட்டி
யபேதமாய்க் காட்டியென்னை
பொருளாக செய்தவனை
போற்றியிருப் போமடி (தோ)

வெட்டவெளி ஊருதாண்டி
வெளியிலொரு வீதி தாண்டி
வீடுவந்த வழி தெரிந்தால்
விழியை நோக்கி யிருப்போமடி (தோ)

வீடொன்று வாசப்படி
வீடுகளும் அப்படியே
மாறி மாறியிருப்பதனால்
மார்க்கம் தெரியவில்லை (தோ)

மார்க்கம் தெரிவதற்கு
மாறி மாறியிருப்பதையும்
ஆஞ்ஞாசு ஆற்தெரிந்தால்
அவனவனு யிருப்போமடி (தோ)

இப்படியும் சொல்லிவிட்டால்
இது நடக்க போவதில்லை
ஆகையினல்த் தானேயவன்
அப்படியும் செய்துவிட்டான் (தோ)

அப்படி செய்ததையும்
அதன் விபரம் சொல்லுகிறேன்
ஆமென்று கேளுமடி
அதிசயமா யிருக்குமடி (தோ)

ஆதிலகாரமென்றான்
அதன் பின் உகாரமென்றான்
உகாரத்தில் மகாரமென்றான்
ஓரெழுத்தாய் வந்து நின்றான் (தோ)

ஓரெழுத்து மொன்றாச்சு
ஓரெழுத்துமைந்தாச்சு
ஐந்து பத்தொன்றாச்சு
ஐந்துக்கைந்து ஐந்தாச்சு (தோ)

அஞ்சுபத் தொன்றானதுவும்
அப்படியே தானதுவும்
அநேகமாய்த் தோன்றுவதும்
அவன் செயலாய் வந்ததடி (தோ)

ஓரெழுத்தும் மண்ணாச்சு
ஓரெழுத்தும் தேயுவாச்சு
ஓரெழுத்தும் அப்பாச்சு
ஓரெழுத்தும் வாயுகாயமாச்சு (தோ)

எண்ணறிய ஜீவன்களும்
என்னத்தினால் வந்ததடி
ஆமென்று சொல்லுமடி
அவன் செயலா லாகுமடி (தோ)

இப்படி செய்ததினால்
இதன் விபரம் தெரியாமல்
நானென்று நின்றேனடி
நாட்டமறியேனடி (தோ)

நாட்டம் தெரியாமல்
நான் பலவாயிருந்து விட்டேன்
நாட்டம் தெரிவதர்க்கு
ஞானி வந்துவிட்டான் (தோ)

ஞானி வந்தவுடன்
ஞானே ஞானே
ஞானே ஞானே
ஞானே ஞானே (தோ)

போது.

ஊரார்கள் கூடுமுன்னே
உற்றார்கள் அழுகுமுன்னே
தன்னை யறிந்திடடி
தானாகத் தெரிந்திடடி (தோ)

தன்னைத் தெரியவென்றால்
தந்திரங் கேளுமடி
துலத்தை•தள்ளிடடி
துரிதமாய்த் தெரிந்திடடி (தோ)

குமரகிரிமலை வரைக்கும்
கோரைப்புல் நீண்டிருக்கும்
காலமேயெழுந்திருந்து
கட்டு நாலறுத்திடடி (தோ)

•

காலமே எழுந்திருந்து
கட்டுநாலறுத்து விட்டால்
காயம் நிலைத்துவிடும்
கண்டிடலாம் சூஸ்த்திரத்தை (தோ)

தூடியலைய வேண்டாம்
ஓவியமாய்த் தேடவேண்டாம்
இருக்கும் விதமாயிருந்தால்
இப்பவே கண்டிடலாம் (தோ)

நிஷ்டை நிஷ்டையென்றாலுமே
நீங்காவஸ்த்து போதமடி
நிஷ்டை நிலை தவறாதே
நிஷ்டை விதம் கூடுமடி • (தோ)

நிஷ்டை நிலை கேளுமடி
நீயாயிருப்பாயடி
நீயாயிருந்து விட்டால்
நிர்விகல்பங் கூடுமடி (தோ)

நிஷ்டை நிலைப்பதற்கு •
நிஷ்திரிகை தாவுமடி
நிஷ்டை நிலைத்துவிடும்
நிஷ்களங்க மாகிடலாம் (தோ)

தத்துவத்தை கண்டு கண்டு
தட்டிவைத்து நிருத்துமடி
தத்துவத்தை நிருத்தி விட்டால்
தானே தானுயிருக்குமடி (தோ)

காய சித்தியென்றுமடி
காயமதைக் கார்த்துமடி
கணலையு மூட்டியுமே
கண்கலக்கப் படலாமோ (தோ)

வேதமொப்பா வாக்கியத்தைத்
விரித்து நீயும் விள்ளாதே
விண்டாலும் ரெண்டாச்சு
விள்ளாவிடி லேகமாச்சு (தோ)

அதி தீவிரமாயிருந்தால்
அது பக்குவம் விள்ளுமடி
பாவிகட்க்கு சொல்லிவிடில்
பாழாக முடியுமடி (தோ)

உற்றது சொன்னாலுமே
அற்றது பொருந்துமடி
அன்றுமே யவ்வை சொன்னாள்
என்றதையும் தெரிந்திடடி (தோ)

எம்மதமும் சம்மதமாய்
என்றுமே யவ்வை சொன்னாள்
அவ்வையவள் சொன்னதையும்
அறிந்து தெரிந்திடடி (தோ)

போனாலும் வாராதடி
பொழுதுபோனால் சிக்காதடி
இன்னதென்று தெரிந்திடடி
எளிதில் உணருமடி (தோ)

என்றைக்கு இருந்தாலுமே
எல்லாவுயிர் ஜீவன்களும்
ஆதியிலே சேருமடி
ஆனந்தமே கூடுமடி (தோ)

அஷ்டசித்தி கர்மமென்றே
அறைந்துவிட்டார் பெரியோர்கள்
சங்கையை யடக்குமடி
சாருதே தள்ளிடடி (தோ)

மூலத்தின் தீயதனை
மூட்டி எறித்திடடி
சடலம் சிவந்துவிடும்
சகசமாய் செய்திடடி (தோ)

மாய்கை மாய்கை என்றுமடி
மலையாதே கேளுமடி
நீக்குகிறதை நீக்கிவிட்டால்
நீயாயிருப்பாடி (தோ)

இப்படியே பெரியயோர்கள்
இதமாகச் சொல்லிவிட்டார்
சொன்ன பழமொழியாலே
சொரூபந் தெரியவில்லை (தோ)

பாடிப் படித்ததையும்
பழக்கத்திலே வேணுமடி
நெடுங்காலந் தவறாமல்
நீயுமதைப் பழகவேணும் (தோ)

எத்தனையோ பெரியோர்கள்
எளிதாகச் சொல்லிவிட்டார்
தினையேனும் நினையாமல்
சீறளிந்து சிறிக்கலாமோ (தோ)

ஊணையுந் தள்ளுமடி
உறக்கத்தையும் வெள்ளுமடி
தனக்குத்தானே பாருமடி
தனித்திருந்தால் தெரியுமடி (தோ)

வையகத்து வாழ்வைநம்பி
வாழுமட்டி பயல்களையும்
க்ஷணத்திலழியுமென்றே
சாற்றிவிட்டார் பெரியோர்கள் (தோ

இருக்கு திருக்குதென்று
எல்லாருந் தேடித்தேடி
கடமயிருமில்லையடி
கற்தனை போற்றுமடி (தோ)

சரிகை கிரிகையென்றும்
யோகஞான மார்க்கமென்று
முறைமுறையாய்ச் சொல்லிவிட்டார்
முந்தின பெரியோர்கள் (தோ)

நான்கு மறையென்றுமடி
நவின்றார் பெரியோர்கள்
அந்த விபரத்தையும்
அறியவே சொல்லுகிறேன் (தோ)

ஆதிநூல் தர்ம்மநூலாம்
அதன்பின் வழிநூலாம்
மூடமாய்ச் சொல்லுமடி
முடிவு நூலாகுமடி (தோ)

ஏணிப்பழுப் போலேயல்லோ
ஏலலோ ஏலமென்று
பதனமாய்ப் பாருமடி
படிப்படியாப் போகவேண்டும (தோ)

தானவ னாகும்வரை
தனித்திருந்து பாருமடி
தனித்திருந்து பாருமடி
தனக்குத்தானுந் தெரிமடி (தோ)

இமயகிரி மலையோரம்
எழுந்திருக்கும் தாளஞ்செடி
தாளஞ்செடி பூவெடுக்க
தானாக வந்தேனடி (தோ)

குருவென்றால் கேளுமடி
குருவென்று மலையவேண்டாம்
துவிதமற்ற குருபரனே
துய்யதிரு மூர்த்தியடி (தோ)

பக்தி சிறத்தையுடன்
பகவானை சேவிப்பதால்
காரணக் குருவுமடி
காட்டுதற்கு வந்திடுவன் (தோ)

தன்னையறிந்துமடி
தன் வீட்டில் பெண்ணிருந்தால்
மாப்பிளை வருவதுபோல்
மறைவாக வந்திடுவன் (தோ)

பொய்ப்புருண போதனைக்கு
போதங்கெட்டு சென்றாயானால்
போதமிளந்துமடி
பொய்யாகப் போய்விடுவாய் (தோ)

பொல்லாவினை நீக்க
புலாலை வெறுத்துவிடு
புலாலை வெறுக்காவிடில்
போதமது களங்கிவிடும் (தோ)

மூச்சொடுங்கி போனவுடன்
மூடர்கள் கூடிக்கொண்டு
போதங்கெட்டு நின்றுமேதான்
புலம்பித் தவிக்கிறார்கள் (தோ)

சாதி வித்தியாசமுந்தான்
சங்கையை யடுக்குமடி
சோதித்துப் பார்த்திடடி
சொரூபமா யிருக்குமடி (தோ)

தீவிர பக்குவற்கு
தெரியவே சொன்னதடி
தீவிரமா யிருந்திடடி
தீர்ந்துவிடும் சந்தேகம் (தோ)

வைத்தியம் வாதமென்றே
வாடிநீயும் திரியாதடி
நித்தியம் நீங்காதடி
நிர்விகல்ப்பம் கூடுமடி (தோ)

சந்தேகம் முற்றுயானல்
வந்துவிடும் பந்தமடி
சந்தேக முற்றுமற்று
சதானந்த மாகுமடி (தோ)

புலியைப்போல் சூடுபோட்டு
பூனேயுமே செய்துகொண்டால்
என்ன பலனுகுமடி
எமனிடத்தில் செல்லுமோடி (தோ)

ஸன்யாச மென்பதையும்
சங்கைதீர தெரியுமோடி
சகல கர்மம் நீங்கினதே
ஸன்யாச மாகுமடி (தோ)

• திரிபுடியு மற்றபோதே
திரிசயமு மில்லேயடி
திரிசயமு மில்லாவிடில்
திரிமூர்த்தி யாகுமடி (தோ)

புருவமத்தி தியானமென்றே
புலம்பி நீயும் திரியாமல்
கைவல்லியமாய் டாருமடி
கருத்தாக நோக்குமடி (தோ)

எழுத்துப் பிசகென்றுமடி
எகனை முகனை பார்க்காதடி
விஷயத்தை தெரிந்திட்டடி
விகற்பத்தை விட்டிட்டடி (தோ)

போதம் போதமென்ற மொழி
போலிக்குப் புரியாதடி
போதத்தைத் தெரிந்திட்டடி
பூரணமாயிருந்திட்டடி (தோ)

என்னுனை யேகமடி
என்னுனை உண்மையடி
சகல பெரியோர்களுமே
சாற்றினது மிப்படியே (தோ)

உலக நடைக்காகவல்லோ
உதரிவிட்டார் பெரியோர்கள்
பேதமையாய் தள்ளாதடி
பெரியோர்கள் வாக்கியத்தை (தோ)

தூலத்தை நானென்றவனும்
துவிதமாயுரைத் திடுவேன்
போலியைத் தள்ளிடடி
போதங்கெட்டு போகாதடி (தோ)

இல்லறம் வேண்டுமானால்
இதமாயிருக்க வேண்டும்
அப்படியுமில்லா விட்டால்
அடைந்திடடி துறவரமே (தோ)

அடியடியென்ற மொழி
அரூபபுகழ்ச்சி மொழி
அரூபமாயிருந்திடடி
அப்புகழ்ச்சியாவாயடி (தோ)

கஞ்சாபினிநெட்டி
கற்பமென வுண்ணுதடி
கற்பமென வுண்டியானால்
கலங்கிவிடும் போதமடி (தோ)

தத்துவ மெஞ்ஞானியடி
நித்திய பிராமணனே
சத்தியமாய்ச் சொல்லுதடி
சகலமறை நான்குமடி (தோ)

பிறப்பிறப்பை யின்னதென்று
பிரித்து தெரிந்திடடி
தனக்குத்தானே தெரிந்திடடி
தன்மயமாயிருந்திடடி (தோ)

மனதின் விசாரணையால்
மற்றெதுவும் போகுமடி
நோக்காமல் நோக்குமடி
நுட்பமாய்ப் பாருமடி (தோ)

ஊணையுந் தள்ளியடி
ஊசிமுனை நின்றாலும்
விட்ட இடம் தெரியாவிட்டால்
விளக்கமுற்று போவாயடி (தோ)

விளக்கமற்று யிருந்துவிட்டால்
விதியுமங்கே யில்லையடி
விதியுமங்கே யில்லாவிட்டால்
வீடடைந்து இருப்பாயடி (தோ)

முடிவறிந்த பெரியோர்கள்
முறைப் படியுமில்லாவிடில்
சந்தேகங் கொள்ளாதடி
சற்று மசையாதிருப்பர் (தோ)

எல்லாந் தெரிந்தவரும்
எல்லாந் தெரியாதவரும்
உண்டோ வுலகினிலே
என்றுமே யவ்வை சொன்னாள் (தோ)

அத்தானடி அத்தானடி
அதிரூப மன்னனடி
புணர்ந்தால் பிரியானடி
பூரண அழகனடி (தோ)

பிரத்தியாருக்குப் போதிப்பதை
பிரித்து நீயும் விட்டாயானல்
பிசகாதிருந்திடலாம்
பேரானந்தம் பொங்குமடி (தோ)

சகலவுயிர் ஜீவனையும்
சற்குருவாய் நினைத்திடடி
சகலவுயிர் ஜீவன்களும்
சதானந்த மாகுமடி (தோ)

இல்லறத் திலுள்ளவர்கள்
இன்னதென்றும் பேசுவார்கள்
பிரித்து நீயும் விள்ளாமல்
பிரியாமோன மிருந்திடடி (தோ)

மௌன மௌனமென்றால்
மற்றொன்றுமில்லையடி
கவுணமாய்ப் பார்த்திடடி
கண்டிடலாம் சூஸ்த்திரத்தை (தோ)

கண்டவர்கள் விண்டதில்லை
விண்டவர்கள் கண்டதில்லை
கண்டவர்கள் விள்ளாவிடில்
கண்பதுவுமெந்த விதம் (தோ)

கற்பகோடி காலமுந்தான்
அற்பமாகத் தோற்றுமடி
அறிந்து நீ பாருமடி
அறிவாகயிருக்குமடி (தோ)

தூலம் பொய்யென்றேதான்
துலங்குமடி வேதமெல்லாம்
தூலமது யில்லாவிட்டால்
துலங்கிடுமோ முத்தனுக்கு (தோ)

சத்தியமா யிருந்ததினல்
சத்தியமா யானேனடி
சற்று விலகாதே வாடி
சத்தியமா யிருந்திடடி (தோ)

பெரியோர்கள் சொன்னபடி
பிரியா திருந்திடடி
பிரியாதிருந்து விட்டால்
பேரின்பங் கண்டிடலாம் (தோ)

உடல் பொருளாவியெல்லாம்
உத்தமர்க்கே விட்டிடடி
உத்தமர் நீ யாகும்வரை
உதவி நீ செய்திடடி (தோ)

குரவன் நிகழ்த்துவதை
கொஞ்சமேனுந் தவருமல்
குறிப்பாகப் பாருமடி
குறித்தயிடந் தெரியுமடி (தோ)

தம்பெலங் கொண்டுமேதான்
அம்பலம் ஏறவேண்டும்
அம்பலம் ஏறுதற்கு
அறிந்த குருமூர்த்திவேணும் (தோ)

பார்த்திடடி பல நாளும்
பார்த்துக் களைந்திடடி
தீர்க்கமாய்ச் சொன்னதையும்
தெரிந்து நீ எடுத்திடடி (தோ)

குரவன் சொன்ன பாதைக்குமே
குதர்க்கங்கள் வந்திடாமல்
தீர்க்கமாய்ப் பார்த்திடடி
தீவிரமாய்த் தெரிந்திடடி (தோ)

அவரவர்கள் போகும்வழி
அநேகமாயிருக்குமடி
அந்தத் திலொன்றுகுமடி
ஆனந்தமே கூடுமடி (தோ)

வடமொழி பாஷையிலே
வளர்ந்ததும் என்னவென்றால்
அகம்பிர்ம்ம மென்றேதான்
ஆத்ம நிஷ்டை செய்யுமென்றார் (தோ)

இருக்கு இருக்குதென்று
ஏய்த்ததடி வேதமெல்லாம்
யுக்தியா லுணர்ந்துமடி
உன்னறிவா யிருந்திடடி (தோ)

ஆணலி பெண்ணென்று
அர்த்தம் தெரியாமல் நீயும்
அசங்கமாய் நினைக்காதடி
அவனேயவன் பாகுமடி (தோ)

அவனவனென்ற மொழி
அதி சூட்சம்மாகுமடி
பிரித்து நீயும் விள்ளாதடி
பேதமையாய்த் திரியாதடி (தோ)

அவனவளென்ற மொழி
ஆனந்தமான மொழி
அவனவளாயிருந்திடடி
ஆனந்தமே யாகுமடி (தோ)

ஆதி சிவன் வாழி
அமரர்களும் வாழி வாழி
மெஞ்ஞானிகட்க்கும் வாழி
மெய்ப் பொருட்க்கும் வாழி வாழி (தோ)

பரப்பிர்ம்ம நம:

சீடனுக் குரைப்பது

முத்திநெறி யரியாத என்ற மெட்டு

இராகம் ஆரபி தாளம் ஆதி சதுரச்சா ஜாதி நடை

அக்கக்கா வாடி வாடி
அத்தானைத் தேடித் தேடி (அக்)

வருவதும் வந்து விடும்
போவதும் போயிவிடும்
என்பதே ஞானமடி
எல்லார்க்கும் தெரியுமடி (அக்)

குணங்குடி என்ற மொழி
குணங்களற்ற இடந்தாண்டி
சூஸ்த்திரத்தை தெரிந்திடடி
சும்மா நீ இருந்திடடி (அக்)

அத்வைத டடிதாண்டி
அதி தீவிர மாயிருந்தால்
தத்வானந்த பொங்குமடி
தனக்குத்தானே தெரியுமடி (அக்)

முடிவறிந்த பெரியோர்கள்
மூடமாக யிருப்பாரடி
பாவிகள் பார்த்துவிடில்
பாதகமாய் நினைப்பாரடி (அக்)

பொய்யானஞ் ஞானிகட்க்கு
பொய்ப்புருண போதனையை
பொய்யென்று உண்மை சொன்னால்
போதந்கெட்டு புலம்புவார்கள் (அக்)

பொருளாது நீ யாகும் வரை
பொருந்துகின்ற துக்க சுகம்
தூரவே தள்ளுமடி
துரிதமாய் நில்லுமடி (அக்)

துறந்தவர்க்கும் துறவார்க்கும்
துணையாகும் இல்லறமே
என்றுமே நாயனாரும்
இயம்பியதை யறிவாயடி (அக்)

மலை வனம் குகை புகுந்து
மாதவங்கள் செய்வோமென்று
கலைந்துமே திரியாதடி
கலங்கிவிடும் ஞானமடி (அக்)

அடயோகம்	என்றமேதான்	
ஆடியோடி	திரியவேண்டாம்	
அடைந்துவிடு	பிற்மக்ஞானம்	
அத்விதமே	யிருந்திடலாம்	(அக்)
சித்தி தொழில்	ஜாலமென்றே	
சிதரிவிட்டார்	பெரியோர்கள்	
சித்திகளை	தள்ளிடடி	
சீக்கிரத்தில்	தெரிந்திடலாம்	(அக்)
சித்திதரும்	தெய்வமதாய்	
சிந்தித்து	யிருந்திடடி	
முக்திவரும்	சீக்கிரத்தில்	
யுக்தியால்	உணருமடி	(அக்)
சத்தியங்கள்	தவறுமல்	
சற்குருவை	போற்றுமடி	
பத்தியங்கள்	தவறிவிட்டால்	
பாதகமாய்	விளைந்துவிடும்	(அக்)

வாசி வாசி என்று நீயும்
வாடியே திரியவேண்டாம்
நேசானு பூதியுற்றால்
நீங்கா துறைந்திடலாம் (அக்)

சத்தியமாய் பெரியோர்கள்
சாற்றியுமே இருக்கிறார்கள்
பொய்யென்று கொள்ளாதடி
புலையாட்டம் செய்யாதடி (அக்)

சித்திரப் பதுமையைப்போல்
சில நாளைக் கிருக்கவேணும்
அப்படியு மிருந்தாலும்
அதன் சூட்சம் தெரியவேண்டும் (அக்)

தாக்சத்தை தள்ளும்போது
ஆலமது அசைந்துவிடும்
தீரவல்ல புருஷனாகி
திரும்பா திருந்திடடி (அக்)

இப்படி பழக்கமதை
இருந்து நீ செய்யும்போது
இடையூறுகள் வந்துவிட்டால்
இருந்திடடி அசிவதாக (அக்)

அசிவாக இருந்துவிடில்
அந்த விடை யூசெல்லாம்
வந்த வழி தெரியாமல்
வாய்பொத்தி நிற்குமடி (அக்)

பொருள்தானு யானபின்பு
போதமாக இருந்திடலாம்
அப்படியு மில்லாவிடில்
அருள்தானுப் திரிந்திடலாம் (அக்)

நிஷ்டையிலே இருக்கும்போது
நினைவுகளும் வாராமல்
கஷ்டமதாய் மனதடக்கி
காணவேணும் சூஷ்த்திரத்தை (அக்)

வேதத்திற் கதிதமாய்
விளங்கும் மா ரகசியத்தை
விமலகுரு வாக்கியமே
விளங்கும்படி செய்துவைக்கும் (அக்)

கடசியான நாள்வரைக்கும்
கரைகடந்து செல்லாமல்
காலத்தை கடந்துமேதான்
காசினியில் இருக்கவேணும் (அக்)

சத்தியமே சத்தியமே
சதானந்த சத்தியமே
நித்தியம் சற்குருவை
நினைப்பினிலே இருத்திடடி (அக்)

நெருபாரும் மயிர்ப்பாலம்
நெருக்கியே போனக்கால்
ஏறவும் தாங்குமடி
எப்படியும் நடந்திடலாம் (அக்)

ஆத்மானு	போகமதை	
அறிந்துமே	சொல்லவென்றால்	
விள்ளவும்	போகாதடி	
விண்டவர்கள்	அதிசயமே	(அக்)
நீங்காமல்	நிஷ்டையிலே	
நிலைத்துமே	யிருந்துவிட்டால்	
ஏகமாகும்	அப்போது	
எதிர்பேச	முடியாது	(அக்)
பிர்ம்மமே	வெளியாக	
பிரதிபிம்பங்	தோன்றிடுமே	
குளிர்ந்துமே	தேகமது	
கும்மென்று	இருக்குமடி	(அக்)
இவ்விடத்தில்	சொல்லவென்றால்	
இம்மொழிதான்	முடியுமடி	
அந்தம்வரை	விள்ளுதற்கு	
அரிதாகும்	யாவர்க்கும்	(அக்)

அப்படித்தான்	அந்தம்வரை	
அறையவென்றால்	தோசமடி	
ஆசையினால்	எல்லோரும்	
அந்தம் வரை	பிள்ளார்கள்	(அக்)
தனக்குத்தானாய்	தன்மயமாய்	
தந்திரமாய்ப்	பார்த்துக்கடி	
சத்தியமே	சத்தியமாய்	
சதானந்தம்	சத்தியமே	(அக்)
இவ்வளவும்	சொன்னதெலாம்	
இந்தப்படி	யுண்மையடி	
என்னாலே	சத்தியமே	
எப்போதும்	இருந்திடுவேன்	(அக்)

பரப்பிர்ம்ம நம.

முமுட்சுக்களுக்கு தெரிவிப்பது.

இராகம்-செஞ்சுருட்டி—தாளம் ஆதிசதுரச்சா ஜாதிநடை.

நொண்டி சிந்து.

மாயா ஜெகத்திரே வாரும்
பேயாபாசத்தைத் தள்ளிடலாம்

என்றைக்கிருந்தாலும் ஒரு நாள்
அன்றைக்கிறப்பது சத்தியமே

என்பது யாவருக்கும் நாளும்
அன்பாக யறிந்துமே யிருந்தாலும்

திண்ணமா நினைக்காமல் நீங்கள்
பின்னமாயும் போரீரே

தூலமதும் நீற்தானோ இதைத்
துரிதமா யின்னதென்றறிந்திரோ

தத்துவம் முப்பத்தாறும் இத்தை
நானுகத் தனக்குத் தெரிந்துடுமே

அந்தக்கரணம் நாலும் சற்றும்
அசையா திருக்கியே கட்டிடுமே

மாத்திரை ஐந்துதனை அதை
மாற்றியேயப் பாலே தள்ளிடுமே

கர்ம்ம ஞானேந்திரத்தை பொல்லா
மர்மமென்றே போக்கிடுமே

பூதமைந்துமே சில
கீதங்கள் செய்யாமல் தள்ளிடுமே

வித்தியா தத்துவத்தை வீண்
அவித்தியாகவே கொன்றுவிட்டு

சிவத்தில் நாலையுமே தள்ளி
சிவம் தாசத்தனித்து விட்டால்

நிஷ்டை நிலைத்துவிடும் நீங்கா
நித்தியமாகவே தெரிந்திடலாம்

ஓமென்று ரைத்திடவே நித்ய
ஓமாதீதமா யிருந்திடலாம்

பதைப்பைவதைக்க வேண்டும் அகண்ட
பரஸ்பரமாகியே யிருந்திடலாம்

நிஷ்கிரிகையை பொட்டு வைத்தால்
நீங்காதெப்போதும் சுகித்திடலாம்

ஏகமாகிடலாம் தனித்து
எப்போதும் விலகா துறைந்திடலாம்
(மாயாஜெகத்தீரே)

பரப்பிரம்ம நம.

ஓர் அறிவிப்பு.

வசனம்.

36 தத்துவங்களை கண்டு தெரிந்தும் ஆத்ம மெஞ்ஞானியை யடுத்து அவர் மனங்களிக்க நடந்து யாதொரு சந்தேக விபரீதமில்லாது அவரிடம் விசாரித்துணர்ந்து பின்னர் அதன்படி பிர்ம்ம நிஷ்டையிலிருந்து பிர்ம்ம க்ஞானத்தை யரிந்த பின்னரே சகலமும் ஈஸ்வரார்ப்பணமாகவே நடக்கிறது. நம் என்ற ஒன்றிருந்தால் அல்லவா நம்மால் நடப்பதென பற்றுண்டென யறிந்து நம்மால் நடப்பது ஒன்றுமேயில்லை என சந்தேகந்தீர தெளிவுற்று சரீர சம்மந்தமாய் வருவதும் போவதுமுண்டு நான் ஒன்றும் செய்கிறதேயில்லை என்ற பூர்ணமான ஞானத்தை யடைவதுடன் இந்நூலை வாசிக்கும் நானுகிய தாய் தந்தைகளான யாவரும் அன்னமானது நீரை பிரித்துவிட்டு பாலை மட்டும் அருந்துவதுபோல் குற்றங்களை நீக்கி நாமும் அவ்வழியில் பின்பற்றி செல்லவேண்டுமே என்றே

ண்ணி விஷயத்தை மட்டும் கொள்வீரெனவும். இன்னும் உலகத்திலுள்ள ஜீவர்களில் சகலரும் மதத்துவேஷமும் ஜாதி வித்தியாசமும் கீழ் மேல் என்ற இப்பேர்ப்பட்ட அஞ்ஞவிஷய துவேஷங்களினாலேயே மெய்யறிவு உதயமாகாமல் உலகப் பற்றைவிட்டு மோக்ஷமெனும் கரையேற சக்தியற்றவர்களாய் மயங்குகிறார்கள் ஒருக்கால் தம் தம் மதத்தில் சொல்லியபடி வழுவாது நடக்கிறதுமில்லை தம் ஜாதிக்கு ஏற்பட்ட தொழிலைச் செய்வதுமில்லை வீணாய் தான் பிரத்தியாரை விட மேன்மையான படிப்பையுடையவன் எனத்தெரிந்து யாவரும் புகழ வேண்டுமென்றும் தற்கால வயற்றுப் பிழைப்புக்காகவும் படிக்கிறார்களே தவிர, தம், தம், மதச்சட்டப்படி வாசித்து வழுவாது நடந்து பகவானால் சிருஷ்டிசெய்யப்பட்ட சுவர்க்கம் நரகத்தையும் விட்டு மோக்ஷமெனும் பகவானது திருவடிகளை யடைய வேண்டுமென்ற எண்ணமிலாதவர்களாய் அற்ப பெண் மயக்கமுற்றவர்களாய் உலக வாழ்வே சாதனமென நம்புகிறார்கள். ஆனால் நரகம் துக்கமா

ஞது என்று சொல்லுகிறபடியால், கெட்ட விஷயங்களை கிருத்தி, நரகத்தைத் தள்ளவேண்டியது, உண்மையே சுவர்க்கம் மேன்மையாகச் சொல்வதால் அதையும் எப்படி விட்டுவிடுவது என்று கேள்வி உண்டாகலாம். அது உண்மையே நிற்க, நம்மை சிருஷ்டிசெய்ததுபோலவேதான், நரகம், சுவர்க்கம் இரண்டையும் சிருஷ்டிசெய்ததெனத் தெரிந்து பஹவானுல், ஜெகஜாலம் போல் சிருஷ்டிசெய்த தெல்லாம் ஒரு காலத்தில் அழிவது நிச்சயமானதென சகல மதத்திலும் சொல்லியிருப்பதால், அற்பமானவற்றை விட்டுவிட்டு அழியாத பஹவானை ஆடைவதே நிர்க்கமான மோக்ஷமென்பதற்கு எட்டுனையும் ஐய்யமில்லை.

ஆனுல், சில மதத்தினர்கள், சரிகை, கிரிகை, யோகம், ஞானம், என்று சொல்லியபடி படிப்படியாகத்தானே போகவேண்டு மென்று சொல்லி வீணே புலம்புவார்கள். அதாவது, இந்நான்கு படிகளும் இவ்வளவு என்று கால நிற்ணயமில்லாதபடியால் இப்படிச் சொன்னதின் கருத்து, நான், எனதென்ற அஞ்ஞான

அபிமானங்களை விட்டொழிப்பதற்காக ஏற்படுத்தின தேயன்றி மனதில் பற்றுவிடாமல் இப்படிச் சொல்லி வைத்த முறைகளோயே, சத்தியமென்றெண்ணி உழல் வதற்காக ஏற்படுத்தவில்லை. ஆனால், தம் தம், ஜா திக்குத் தகுந்த கர்மங்களைச் செய்கவாவேண்டி யது நிச்சயமே நிற்க, சில மகான்கள் ஞானமெனும் மெய்ப்பறிவை யடைந்தபின் நான் எனதென்றபிமானங் களை சந்தேகமற பூருவும் விட்டுவிட்டு நிர்சிந்தையா யிருப்பவர்களைக் குறித்து சிலர் என்ன சொல்வது என்றால் இவன் என்ன கிறக்கன் மாதிரியிருக்கிறான் இவனுக்கு என்ன தெரியும் எவ்வளவோ செய்ய வேண்டியதிருக்க இவன் இப்படி இருந்தால் என்ன தெரியும் பட்டணத்தடிகள் இப்படி சொல்லியிருக்கி றார் இன்னும் தாயுமானவர் குணங்குடி மஷ்த்தான் சாயபு அவர்கள் அகஸ்த்தியர் இவர்களெல்லாம் இப் படி சொலலியிருக்கிறார்கள் என்று தற்சமயம் தனக் குத் தெரிந்த பாடல்களில் இரண்டொன்றை சொல் லிக்கொண்டு நானும் கொஞ்சநாள் இப்படித்தான்

திரிந்தேன் என்னமோ விதியில்லை. என்று சொல்லி புலம்பியும் இவன் ஏமாற்றி திரிகிறான் இவனை பரி சோதிக்கவேணும் என்றும் இன்னும் இன்ன ஊரில் ஒரு சாமியார் இருக்கிறார் அவர் அப்படி இருக்கிறார். இன்ன ஊரில் இன்னுமொருவர் இப்படி இருக்கிறார். இன்னுமொருவர் மூன்று தடவை அடங்கி எழுந்தி ருந்து சித்துகள் எல்லாம் செய்கிறார் இவன் என்னடா ஏய்க்கிறான் என்று சொல்லியும் அடித்தும் அநேக இம்சைகளைச் செய்தும் துன்புறுத்துவது மூண்டு ஏன் என்றால் மூன்று வேளையும் சாப்பிடும் சாப்பிட் டிருனால் தசை கொழுப்பினாலும் தான் இருக்கிற ஷோ க்கினாலும் பந்துக்கள் சிநேகிதர்கள் இருக்கிறார்கள். என்ற கெர்வத்தினாலும் சிகரட்டு, கஞ்சா, கள், இவைக ளை சாப்பிட்டபோதை திமிரினாலும் மேல் சொல்லி யபடி செய்கிறார்கள் அதாவது எதுபோலெனில் பன் றியானது நரகத்தை புசிக்கும்போது தனக்கு நரகம் அசுசியென்றெண்ணாமல் இருகண்ணையும் மூடிக்கொ ண்டு புசிப்பதுபோல் பாவமூட்டை யெனும் நரகம்

இவர்களுக்கென்றே ஏற்பட்டிருப்பதால் அது புரியா மல் செய்கிறார்கள். இன்னும் மற்ற விவேக முடை யோர்கள் சொல்லித் தெரிவித்தபோதிலும் போப்போ குருக்களை கடித்த நாய் நாகத்துக்கு போகுமுன் தர்க் காலம் குருக்கள் படும் கஷ்டம் போதும் என்று சொ ல்லி புலம்பும் நாஸ்திகர்க்கு என்ன சொல்வது அம் மகான் தேகத்தோடிருந்த போதிலும் பரிபூரண இரு மையுற்றவர் அகண்ட சுரூப சச்சுதாநந்த பாக்கியன் அவருக்கு ஊரேது மலையேது இருப்பேது நினைவேது ஏகாந்தமுற்றவர் அல்லவா அவர்கள் தேகம் எங்குமி ருக்கும் அவர்களின் நிலை திருமூர்த்திக்கும் தோனு மோ அதோ மா நுட்பம் என்று புரியாத அனுச் சாரியர்களையும் இன்னும் சிலர் சொல்வது என்னவென் றால் இதற்கு முந்தின பெரியோர்களால் எத்தனையோ நூல்கள் சொல்லப்பட்டிருக்கின்றன எல்லாரும் சொன் னதைவிட இவர் என்ன புதிதாய் சொல்லப்போகுறார் என்றும் பலவிதமாய் பேசியும் தனக்கு யாதொரு சந் தேக விபரீதங்களில்லாதவரைப்போல் பேசி உழலும்

அறிவினர்களை சீச்சீ என அகற்றியும் சகல பெரியோர்களும் முடிவில் ஒரே பதத்தை யடைந்திருந்தபோதிலும் ஒவ்வொருவரும் சென்ற ஞான மார்க்கங்களில் அனுவிசயமான தொழில்களைவிட்டு நமது ஜீவிதகாலம் இவ்வளவென்று தெரிய வராதல்லவா எனயுக்தியாலுணர்ந்து இக்ஷணமே பகவானை அன்போடு சதாவிடாது தொழுது குருநாதனருளியதைத்தவறாது அதன்படி தியான பிர்ம்ம நிஷ்டையிலிருந்து தாம், தாம், அடைந்த சுபானுபவத்தை உலகத்தார்கள் எளிதில் ஞானத்தை யடையும்பொருட்டு கிருபா நோக்கத்தால் ஈஸ்வரார்ப்பணமாக சொல்லப்பட்டதெனவுணர்ந்து பின்பற்றி செல்வீர்களென நம்பப்பட்டுள்.

பரப்பிர்ம்ம நம:

மெஞ்ஞானக் கும்மி.

இராகம்—செஞ்சுருட்டி—தாளம் ரூபகம் திசரஜாதி நடை.

அக்கக்கா எல்லோரும் வாருங்கடி நம்ம
அத்தானைச் சேர்ந்தேயிருப்போமடி
அத்விதக் கும்மியடியுங்கடி யருள்
ஆனந்தமாகவே பொங்குமடி

கும்மியடிக்கிற தோழிகளே ஒரு
கோளாறுவிள்ளுவேன் வாருங்கடி
குருவனைச்சதாப் போற்றிக்கொண்டு சித்தம்
குவியக் கும்மியடியுங்கடி

நதியஞ்சுநதியைக் கடந்திடுங்கள் பல
நானு பேதத்தைக் கொல்லுங்கடி
நாதாந்த விஞ்ஞானம் பாருங்கடி அந்த
நாதனைக்காணலாம் வாருங்கடி

பத்திரமாகவே பாருங்கடி — சங்கை
பதைப்பைத்தள்ளியே நில்லுங்கடி
போதமாகவே கொள்ளுங்கடி — சதா
பூரணமாகவே பொங்குமடி

நிர்விகல்பமே கூடுங்கடி — நித்ய
நின்மயமாகவே நில்லுங்கடி
நீக்கமில்லாமலே பாருமடி — நிஷ்டை
நீங்காது யெப்போதுமாகுமடி

வாஞ்ஞானம் வீணாகப் பேசவேண்டாம் — மெய்
வாஸ்த்துவமாகவே நில்லுங்கடி
வாதம் வாதத்தைத் தள்ளுங்கடி — சம்மா
வாய் பேசாவூமையாய் நில்லுங்கடி

வாய் பேசாவூமையாய் நின்றாலும் — அங்கே
வாக்குமனமு மொன்றாகவேணும்
வாக்குமனமு மொன்றாகிவிட்டால் — மற்ற
வானறமங் கேயில்லையடி

ஒன்றிரண்டென்று பேசவேண்டாம் யுண்மை
உற்றவிடத்தையும் விள்ளவேண்டாம்
ஒண்டியாகவே யிருக்கவேணும் மௌன
உண்மையதாகவே நில்லுங்கடி

விதிவிலக்கையு மற்றதடி மெய்
சத்தியமாகவே யானதடி
கதிபெரவும் விட்டதடி ஞானக்
கண்ணாலே கண்ணால் பாருங்கடி

வாதத்தொழிலையும் தள்ளுங்கடி நித்ய
போதமாகவே கொள்ளுங்கடி
பேதத்தொழிலை விட்டுமடி மெய்
பித்தனாகவே நில்லுங்கடி

அஞ்ஞான பேதரைக் கூடவேண்டாம் யவர்
அரைவதையும் கொள்ளவேண்டாம்
விஞ்ஞானமாகவே நில்லுங்கடி சத்ய
விதேகமாகவே பாருங்கடி

விட்ட குறையைத் தெரியுங்கடி நீங்கள்
வெட்கமில்லாமலே திரியலாமோ
தொட்டயதையும் விடவேண்டாம் சதா
தொந்தமாகவே நில்லுங்கடி.

மூன்று பத்தாறு முத்தையடி ஒன்று
கோர்த்து மாலை செய்யுங்கடி
ஊனமில்லாமலே போடுங்கடி சத்ய
ஒமா நிதமாயிருந் திடுங்கள்

ஒன்பது பத்தாறரிசியைத்தான் யதை
ஒன்றுப் சேர்த்திடித்திடுங்கள்
அன்பு நீருல்க் கரைத்திடுங்கள் மாலை
அகண்ட தோசை வார்த்திடுங்கள்

ஓமெனுங்கடலை யரைத்திடுங்கள் யதை
உற்ற சட்னியாய்ச் செய்திடுங்கள்
தானென்று சொல்லிகொண்டுமேதான் சற்று
தாமதமில்லாதே வந்திடுவன்

மானங்கெட்டு வந்திடுவன் — பவன்

ஆணவமற்ற கள்ளனடி

பூரணமாகவே யுண்டிடுவன் — வெட்க

ரோசயில்லாத அத்தானவன்

பூரண நிலவுதான் வாருங்கடி — நல்ல

புட்பாரகப் பொட்டுவைத்திடுவோம்

ஜிலு ஜிலுவென்று ஜொலித்துவிடும் — தேகம்

ஜில்லென்று குளிர்ச்சியாகிவிடும்

என்னமோருத்தன் வந்தானே — பவன்

ஏதுமில்லாத சுத்தனவன்

சொல்லாமற் சொல்லிவைத்தானே — நான்

சுத்த சூன்யமானேனே

கருதிக்குமெட்டாத அத்தானே — பவனை

கருத்திலேகவனமாய் நோக்குங்கடி

திருத்தியே நின்மயம் பாருங்கடி — நித்ய

நிஷ்களங்கமே யாகிடலாம்

அத்தாளுகவே கேளுங்கடி — சுத்த
அத்விதமாகவே யிருந்திடுங்கள்
உத்தம மானவுறுதிதானே — சற்று
உற்றயிருந்துமே பாருங்கடி

பஞ்சபூத சையோகம் பாருங்கடி — மா
பரஸ்பர வஸ்த்துவாயிருக்குமடி
மிஞ்சங்காலா தீதமாகுங்கடி — சற்று
அஞ்சிடாமல் நீ யானந்தமே

சத்தியமாகவே யுண்மைதானே — நித்ய
சத்தியமாகவே நின்றேனே
பத்தியமாகவே நின்றதினுல் — யருள்
சத்தியமாகவே தந்தானே

எப்போதும் பிரியாமலடி — மோகம்
தர்ப்போது தானுயிருந்திடுங்கள்
தத்துவமசிவெனுந் தாளத்திலே — சதா
தாண்டிக்கு கும்மியடியுங்கடி

பரப்பிர்ம்ம நம.

சொரூப அனுபூதி

அர்ப்பமாமுலகபாவுமதனில் ஜீவர்யாவும்
கர்ப்பனையென்றேயெண்ணிகருத்தினில்மிகவுமோர்ந்து
செப்படிவித்தைக்கொப்பாய் சேர்விழிமாதர்வாழ்வைச்
சொர்ப்பனம் போலேகண்டு துணிந்தவன் ஞானியாமே.

தத்துவங்களறு நான்காய் முப்த்தாறுப்
சகலவித நூல்களிலே தொன்னூற்றாய்
சித்தமொடு குணங்குறிகள் பிரித்துக்காட்டி
சித்தாந்தம் வேதாந்தமிரண்டாய் செய்து
மெத்தவுமே மேலோர்கள் சொன்னமார்க்கம்
மேதினியி னூலெல்லா மொன்றேயாகும்
உத்தியினுணர்ந்து தன்னையுணராரெல்லாம்
மூளரியே வீண்தர்க்க முறைப்பார்தாமே

தன்னையரிந்துணர்ந்தவர்க்கே மாயை நீங்கி
சகலவுயிர் சராசரமும் சிவமாய்க்காணும்
தன்னையரிந்துணராருக்கே மாய்கை மூடித்
தன்னதென்று மென்னதென்றுமிரண்டாய் மேவி

பின்னையவர் மதிமயங்கிப் பேதா பேதம்
பெரிதென்றுஞ் சிறிதென்று நீ நானென்றும்
இன்னபடி தன்னையரிந்துணராரெல்லாம்
எழுவகையிலிறந்திறந்து போவார்தாமே

இரவு பகலற்றவிடம் பெரிங்ஙைதகண்டா
லென்னதென்றும் யாதென்று மியம்பப்போமோ
ஒருவனவன்றோன்றி வரக்கண்டாரெல்லாம்
மூலக்மெலாமொன்றாகி வெரும் பொய்யான
கருவுருவாமுலகினுள் ஜீவ கோடி
கண்டதெல்லாங்கனவாகி யொன்றுங்காணோம்
அருவுருவாயடி யெடுத்தென் முடியிற்றாக்கி
யருட்குருவாய் வந்தவொன்றே யகண்டவாழ்வே

தூக்கியதோர் பாதமது கண்டேனுள்ளே
சுடரொளியாய் நின்றதொரு சோதிகண்டேன்
தாக்கியதோர் பாதமென்றன் சிரசிற்றாக்கி
தரணியெலாமென்னையலா லொன்றுங் காணேன்

ஆக்கியழித்திடும் செய்கையங்கே கண்டேன்
    அண்டங்கள் பலகோடி அதனுள்க்கண்டேன்
மூர்க்கமெனு மூவாசைவிட்டொழிந்தால்
    முதல்வனார் மோகமது காணலாமே

காணவென்றால் வெகுகோடி காலமாகுங்
    கலைகண்டன் சழலடி கண்டுருகுவோர்க்குத்
தோணுமது ஆக்கியதோர் பாதங்கண்டோர்
    சோனே சலனையிதுமேலோர் சொன்னார்
வீணரிட கட்டுறவை விட்டு நீங்கி
    வேதாந்தத் துறையறிந்துருகுவோர்க்கு
காணுமது கடவுளடி சிரசிற்கண்டால்
    கற்றதெலாம் பலித்ததென்று கருதுவீரே

கருதுவார் பதிமூன்று குணங்கடன்னைக்
    கடமூன்று நானென்று கருத்துளாகிப்
பெரிதென்றுஞ் சிறிதென்றும் நீ நானென்றும்
    பேதங்கள் பற்பலவாய்ப் பேசுமாந்தர்

கரைகடந்தவெள்ளமே கண்டவர்க்குக் கண்ணொளிவே
திரைமறையுமில்லா வென்றீசமே கண்வளரீர்

பொருமையிகப் பொருந்து போதமாய் நின்றவற்கு
சொரூபமாய் நின்ற வென்ஜோதியே கண்வளரீர்

சத்துமசத்துவிட்டு சர்வமுமாயானவற்கு
சுத்தபிர்ம்ம னானென்று துலங்கியே நின்றவனே

வாக்கற்றமோனமாய் வந்து குடிகொண்டோற்கு
தாக்கற்ற தன்மயமாய் தான் வந்திருப்பவனே

உள்ளும்புறமும் ஓர் நிறையாய் நின்றவற்கு
விள்ளும்பொருளாய் விலக்கமற்று வந்தவனே

ஆண் பெண்ணலியென் றசங்கமில்லாதவற்கு
தேனமிர்தமாய் வந்த செல்வமே கண்வளரீர்

அட்டாளதேச மடங்கலுமென்னதென்றே
திட்டமாய் ஓர் குடைக்குள் தீவிரமாய் நின்றவனே

அழியாப்பதமாய் அகண்டமாய் நின்றவர்க்கு
ஒழியாச்சுடராய் ஒற்றுமையாய் வந்தவனே

அண்டபுவனமுமாய் அடிமுடியுமில்லாமல்
கண்டவற்குக்கண்ணாய் காக்ஷியாய் வந்தவனே

பார்க்கப் பலவிதமாய் பல்லுயிரும் ஆன்மாவாய்
கார்க்கும் திறமையுள்ள கர்த்தனே கண்வளரீர்

துறந்தவற்குப்பேரின்பத் தூயவறிவாயும்
கரநெல்லிக்கனியென்று கார்க்கமிக வந்தவனே

சித்திரப்பதுமைபோல் தீரமாய் நின்றவற்கு
சுத்தர்சுகிக்கும் சுகமே நானென்றவனே

உறங்கா உறக்கமே ஊனமற்ற என்னுறவே
மறவாத இன்பமாரியே கண்வளரீர்

முத்தரறியும் முடிவான தன்மயமாய்
சுத்தநிர்விகல்பமாய் சூதாயிருந்தவனே

உள்ளமே கோவிலாய் உறைந்திருக்கும் லிங்கமதாய்
கள்ளமற்றபோதே காட்டுவேனென்றவனே

உண்மையாய் நாளும் ஓரெழுத்தாய் வந்தவனே
நன்மையா யானந்தம் நான் தருவேனென்றவனே

நேசானுபூதியுற்றால் நீங்காதுறைந்திடுவேன்
பேசானுபூதியாய் பேரின்பமென்றவனே

நாட்டமுற்ற நாணமதாய் நாடியேயிருந்துவிட்டால்
தேட்டமின்றியாளும் செய்திடுவேனென்
[றவனே

கள்ளவேடமதைக் களைந்துமே நீக்கிவிட்டல்
உள்ளத்தில் நானுமொடுங்வேனென்றவனே

பெரிதுசிறிதென்று பேதங்களுமில்லாவிடில்
துரியாதீதப்பொருளாய் தோய்வேனென்றவனே

ஜாதி வகுப்புக்களும் சற்றுமேயில்லாவிட்டால்
ஜோதியாய்வருவேனென்று சொல்லாமற்
[சொன்னவனே

கண்ணுக்குத்தோற்றம் கணக்கில்லா ஜீவனுள்ளே
தன்னுக்குள்த்தானுய் தங்கியேயிருந்தவனே

வேதமொப்பா வாக்கியத்தை விரித்துமேவிட்டாலும்
வேதாதிதமாகாமல் விலகுவேனென்றவனே

ஆதியேவெளியே அகண்ட பரம்பொருளே
ஜோதியே என்னேப்பா சொரூபமே கண்வளரீர்

செல்வச்சிகாமணியே தேடறிய ரத்தினமே
அல்லும்பகலுமற்ற என்னன்பே நீர் கண்வளரீர்

முத்தனே மூவாமுதலே யரும்பொருளே
கர்த்தனேயெந்தன் கண்மணியே கண்வளரீர்

விண்ணே ஒழிவே விளங்கும் நவமணியே
கண்ணே பேரின்பக்கடலே நீர் கண்வளரீர

தேனே திகட்டாததெள்ளமுதே யெங்கள்பெரு
மானே மெஞ்ஞானமணியே நீர் கண்வளரீர்

போதப்பொருளே புகளரிய நல்லருளே
வேதப்பொருளே வெளியே நீர் கண்வளரீர்

முத்தே பவளமே முக்கனியே செந்தேனே
சித்தேபரவடிவே தெளிவே நீர் கண்வளரீர்

ஊஞானியுள்ளே யுறையுயிருயெப் பொருட்கும்
கோனாகிநின்ற வென்குலமே நீர் கண்வளரீர்

பக்தியகலாமற் பணிந்திடும் பத்தர்தமக்
நித்யகல்யாண குணநிதியே கண்வளரீர்

நித்தமுன்பதத்தில் நீங்காது நின்றுழல
• சித்தம் தெளியவந்த பத்தியமே கண்வளரீர்

வள்ளலெனவுன்னை வழுத்தயறியாத கொடுங்
கள்ளனெனையாளவந்த கருத்தே கண்வளரீர்

பொய்யான வாழ்க்கையிலென்புந்தி புகளாதபடி
மெய்பாவோர் நிலை கொடுத்த என்னையா
[கண்வளரீர்

நித்தமுனைச்சேவித்தே நின்புகழைபாடியெந்தன்
சித்தமகிள்ந்திருக்கும் என் சின்மயமே கண்வளரீர்

எல்லையில்லாத்துண்பத் தேழைகளங்காத வண்ணம்
தொல்லைவினையைத் தொலைத்த சுகமே நீர்
[கண்வளரீர்

கடசி நாள்வரைக்கும் கைவிடாதருள்புரிந்து
தடையெதுவுமில்லாது தர்க்காக்கும் பராபரமே

பரப்பிர்ம்ம நம:

நிஷ்டை விபரம்.

இராகம்—ஆநந்த பைரவி—தாளம் ஏகம்
சதுரச்சர ஜாதிநடை.

பல்லவி.

நிற்விகல்ப்ப நிஷ்டை கூடு நீ
நிதமும் பரனைப் பாடு (நிற்)

அநு பல்லவி.

கற்பமார்க்கம் தனையே தள்ளு
அற்பமாக அதனை வெல்லு (நிற்)

சரணம்.

எத்தனை காலம் ஜடலம் வைத்து
அத்தனை காலம் அதன் மேல் பித்து
கர்த்தனைதெரியவே காலமும் அற்று
விர்த்தனுப்போக அந்த விபத்து (நிற்)

தெளிதெளி ஞானம் தெளியவடித்து
ஜிலுஜிலுவென்று ஒளிவு ஜொலித்து
ஒளி ஒளி அஞ்ஞான இருளையொழித்து
ஜொலி ஜொலி ஜோதி ஜோருபமைத்து (நிற்)

கருணை பொங்கித் ததும்புமப்போது
கிருபை வைத்து அருளையப்போது
இருளை நீக்கியே சிவமாயமைத்து
இருவினையற்று ஏகம் செய்வித்து (நிற்)

சித்திரம்போலவே அசைவறச்செய்து
சத்தியமாகவே தனித்துமிருந்து
சித்தமும் சலியா தொன்றாய் வைத்து
சத்தமுமில்லாச் சமயம் ஜெபித்து (நிற்)

சுருதிமுடிவாய்த் தேடியெடுத்து
சித்திியாய்த் தேரித்தெளிந்து
சுத்தரறிவாய்த் தோன்றியிருந்து
நித்தியமாகவே நீ சுடரொத்து (நிற்)

அறிவையுருட்டித் திரட்டியெடுத்து
பொறியைச்சுருட்டி திரிகுணம் தடுத்து
சொரூபத்தைவிட்டு பிரியாதடுத்து
உரிமையாய்த்தொட்டு உரியதாயெடுத்து (நிற்)

பரப்பிர்ம்ம நம:

சோரூப நிஷ்டை கூடும் விதம்.

இராகம் புன்னாகவராளி தாளம் ஆதி சதுரச்சர ஜாதிநடை

அமிதங்கொண்டு வந்தேனக்கக்கா அத்தானைக்
[காணீரோ

சங்கையைற்றான் சகலமாயுற்றான்
பங்கமேயற்றான் பகட்டாதிருந்தான் (அமி)

சொல்லுதற்கெட்டான் சூட்சமாயுற்றான்
அல்லும்பகலுமற்றான் ஆச்சரியமுற்றான் (அமி)

பசுபதைப்பற்றுன் பாரிஜெவிற்றுன்
பேசாதிருக்கவைத்தான் பேரின்பமுற்றுன் (ஆமி)

வேதத்தைக்கடைந்தேன் விகற்பத்தை வடித்தேன்
பேதரசம்பிளிந்தேன் பேரில்லாறுகந்திட (ஆமி)

கோசங்களைந்தேன் கூசாமல்த் தேனெடுத்தேன்
நேசமாய்ச் சேர்த்தேன் நிச்சயமாய்ச்செய்தேன்(ஆமி)

விஷயக்கனி பிளிந்தேன் விஞ்ஞான நெய் வார்த்தேன்
பிசகாதிருக்கவைத்தேன் பின்னுமுன்னறவைத்தேன் ()

பாவித்திருந்துபார்த்தேன் பாருது ஓடி விட்டான்
பாவிபரப்பானவன் பக்குவமாய்க் கொண்டுவாடி ()

பாருது பார்த்திருந்தால் பதையாதிருப்பவன்டி
தேராத சிந்தையாறுல் தெருவிலே விட்டிடுவன்(ஆமி)

என்றுணே சத்தியமே இம்முறை நில்லுமடி
தன்றுணயுண்மையடி சாதிப்போர் முத்தாடி (ஆமி)
பரப்பிர்ம்ம நம:

அதுவுமிது.

இராகம்-தன்யாசி-தாளம் ஆதி சதுரச்சர ஜாதிநடை.

மிட்டாய் வாங்கலையோ அம்மம்மா மிட்டாய்
கட்டுக்கடங்காக் கடலைமா சேர்த்தது
மட்டுக்கடங்கா வாசனை கொஞ்சுது (மி)

மெய்யாம் பசுவின் நெய்யில் சுட்டது
பொய்யல்ல அம்மம்மா போதந்திரண்டது (மி)

மறைநாலும் தேடிக்காணா மறைவாயிருக்கும் மிட்டாய்
கரைகாணாப் பேர்களுக்கு திரையாயிருக்குமம்மா (மி)

சுத்தர் சுகிக்கும்மிட்டாய் சும்மாயிருக்கும் மிட்டாய்
பத்தியம் நீங்கா மிட்டாய் பதைப்பறச்செய்யுமிட்டாய்()

மூலத்தின் தீபால் மூட்டின அடுப்பில்
ஜாலமில்லாச் சட்டியில் சத்தியமாய்ச் செய்தது (மி)

நிர்விகற்பச் சக்கரை நேர்த்தியாய்ச் சேர்த்தது
மர்மமுமில்லாத மந்திர மிட்டாயம்மா (மி)

நனப்பு மறப்புமில்லா நாடியிருக்குமிட்டாய்
தினமசையாதிருக்கும் தீவிரம் அம்மம்மா (மி)

உலகமெல்லாங்கூடி உண்ணக்குறையா மிட்டாய்
கலகமில்லாமலே காட்டிக்கொடுக்கும் நல்ல (மி)

ஜிலுஜிலுவென்று ஒழிவு ஜொலிக்கும் மிட்டாய்
குளுகுளுவென்று கூடியிருக்குமம்மா (மி)

சின்மயமான மிட்டாய் சித்தமொடுங்கச் செய்யும்
தன்மயமாயிருந்தால் தனக்குத்தான் ருசிக்கும் (மி)

பொய்யாயுண்போர்க்கு பொருந்தாத மிட்டாயம்மா
மெய்யாயிருப்பவர்க்கு மேட்டிமை கொடுக்கும் (மி)

மோகங்கடந்த மிட்டாய் மோனந்திரண்ட மிட்டாய்
போகங்கடந்த மிட்டாய் யேகாந்த மிட்டாயம்மா (மி)

பிறப் பிறப்பறுக்கு பேருனந்தமான
[மிட்டாய் [மிட்டாய்
பாஷ்பரமான மிட்டாய் பதியுற்றிக்குதம்மா (மி)
பக்தாருந்து மிட்டாய் பாகதியானதம்மா
முத்தர் விருந்தழிக்கும் சத்தியமம்மா நல்ல (மி)

பரப்பிர்ம்ம நம:

———

வஸ்த்துவானந்த புகள்ச்சி.

இராகம்—கல்யாணி—தாளம் ஏகம் சதுரச்சர ஜாதி.

ஊஞ்சலாடினரா னந்த
ஊஞ்சலாடினர்

ஆதியந்தமும் நடுவுமற்றுமே அருளாகி யெங்கு
[மாயிருந்து (ஊஞ்)

விதி விலக்கற்று வெகு கெதிபொருவுற்று
பதிபளக்கமுற்று பரமானந்தமபெற்று (ஊஞ்)

சங்கையையற்று சதா நிஷ்டையைபெற்று
பங்கமேயற்று பதைப் பறவுமேவுற்று (ஊஞ்)

அத்விதப்பலகை அழகாகவே செய்து
சாத்விகச்சங்கிலி தளாமலேகட்டி (ஊஞ்)

நிர்குணமதாய் நிர்ணயமுற்று
நிர்விகல்ப்பமாய் நிர்மலமதாய் (ஊஞ்)

சுருதிகடந்துமே சுத்தரறிவாய்
அருதிவரைக்குமே அத்விதமுற்று (ஊஞ்)

விட்ட விடந்தொட்டு வெட்ட வெளியிலே
திட்டமாய்செய்து வொட்ட சுரூபமாய் (ஊஞ்)

யுக்தியனுபவம் பக்திபகலாமல்
சித்தியமதுவாய் சத்தியமென்றும் (ஊஞ்)

உள்ளும் புறம்பும் ஓர் நிறையதாய்
விள்ளும் பொருளாய் வேற்றுமையற்று (ஊஞ்)

ஜெய ஜெயவென்று ஜெய பேரிகை கொட்டி
சுய சுய ஜோதி வெகு ஜோர்ருகக்காட்டி (ஊஞ்)

பரப்பிர்ம்ம ரய:

இராகம்—பியாகித—தாளம் மிஸ்ர தாதிநடை.

சர்வம் கொண்டலையாதிர்
கசடர்களே (கர்)

கர்ம்ம வினையைவிட்டு கடைத்தேறவே ஒரு
மர்மம் செய்துகொண்டு மலைக்காதிரே (கர்)

தர்ம்மங்கள்செய்து தானங்கொடுத்தாலும்
அர்ச்சனை தினந்தோரும் அனுஷ்டித்ததாலும் ()

இதுவரை என்ன பயனடைந்தீர்

எதுவுங்காணாமலேங்கி யலைந்தீர் (கா)

பூசைகள் செய்திடும் புல்லறிவோர்களே

ஆசையில்லா அஞ்ஞானிகளே (கா)

ஆசைவைத்து அரும்பூசை செய்தால்

ஈசனடிகாணீர் இவ்விதத்தால் (கா)

பாழ்மனதைப் பரவவிடாது

கேள் தத்துவத்தை யோடவிடாது (கா)

பந்த பாசந்தனை வேறறுத்து

அந்த அத்விந்ததனைப் பொருந்து (கா)

குருசொன்ன மொழிதனைத் தவரிடாது

ஒரு மனதாய் மந்திரம் நீ யோது (கா)

துரை தவறுமலே தூக்கத்தைத் தள்ளும்

அரை நிமிஷத்தில் அறண்பதி விள்ளும் (கா)

பரப்பிர்ம்ம நம:

இராகம்—சகானு—தாளம் சதுரச்சா ஜாதிநடை.

பல்லவி.

ஐயையோ என்ன சொல்லுவேனே என்
அடிவயர் பற்றுதே தானே

அனு பல்லவி.

வையத்தில் மாதரான பாவி களே
மனதில் நினைந்துருகு தாவி (ஐ)

சரணம்.

தங்க நகைத தாவென வாட்டி இன்னும்
கொங்கைக்கேற்ற ரவிக்கை மூட்டி
எங்கே கொண்டுவாவென்றோட்டி விடும்
வந்திழையைச் சேர்காமாட்டி களே (ஐ)

கொண்ட புருடன்தனை விட்டு பல
கூத்தியா பயல்தனை தொட்டு
திண்டாடியே வீணாய் கெட்டு போகும்
சிறிக்கிகள் காலில்தினம் முட்டும் பயலே ()

ஏகவெளி நாதனைப் போற்று அவன்
இருதாள்களுக்கு மலர் சாற்று
மோகவலையிற்சிக்கி தினமே திரியும்
மூடர்கள் மனமென்ன பிணமே (ஐ)

இந்த நடத்தையதி ஞாலை ஐயோ
இல்லற தர்ம்மமொருக் காலை
மைந்தர்காளில்லையினி மறையை தினம்
வழுவாது செய்வீரிம் முறையை (ஐ)

பரப்பிர்ம்ம நம:

———

இராகம்--முகாரி—தாளம் ரூபகம் திஸர ஜாதிநடை.

பரமேயெந்தன் பரமேயெந்தன்
பாச மூன்றும் பாவியை விடுதில்லையே
இறக்கமில்லா நீயிருக்க
என்னபிழை செய்தேன் செய்தேன் செய்தேன்

இத்தரையில் தாயூமையா யின்றுலுமச்சேவை
சித்தம் மகள்வதுபோலவே சீர்தூக்கி யாள்வாயே (ப)

நாதா யருள் நாதா யருள்
நாயேன் மனம் நாளுமுனை மறவாப்
பாதகனென் பஞ்சபூதப்
பற்றறவே செய்வாய் செய்வாய் செய்வாய்
பாவையர்க ளாசைநீக்கி க்காவாயுந்தன் தஞ்சம்
சேவைதர மேவிவரத் தமியேன் மீதேன் வஞ்சம் (ப)

ஞானந்தர ஞானந்தர
நாடிவாரும் நம்பினேன் காரும்
புவன ரக்ஷகா போற்றினேன்
பூமாயடியேனே நாயேனே
நீர்க்குமிழியை நிகரும் வாழ்வை நிலையென்றே
மோககமாக் கொடியபாவம் முழுதுஞ் செய்தேனின்றே

தாராய் வரம் தாராய் வரம்
தமியேனுக்கிங் கார்மேன் துணை ஐயா

வாராய்க்கண்ணால் பாரும் அடிமை

வல்வினையைத் தீரும் தீரும் தீரும்

ஜலமில்லாத்தாமரைக் குத்தரையிலுண்டோ நிலையே

நிலமீதினில் வேருஜெகதி நீயில்லா திலையே (ப)

பரப்பிர்ம்ம நம:

இராகம்—பியாக்—தாளம் சாப் மிஸ்ரஜாதி.

ஓம் பிரணவா வாராய் உன்னை

நம்பினேன் காராய் (ஓ)

சின்மயவடிவே உன்னருள்தா வே

இன்னமும் தாமதம் ஏனை யா

பிர்ம்மமானவா அடி

மைதனைக்காவா

ஜெகமதில் ஒழிபோல் பரவி யே

அகமதில் நிறைந்த வெண்வெளி யே

மக மகவாய் வந்த நீ யே

சுகமது தந்தாள்வா யே (ஓ)

மும்மல ஆசையை முழுதுமே நீக்க
இம்முறை செய்தேனையா
சுற்றத்தாராசை விட்டு
தேடுதன்னாசை
பற்றற்றேனுனதடி கப்பி
மற்றதை மரந்தேன் வெம்பி
அற்றேனாறுறை நானே
உற்றேனுன் ஜோதி தானே (ஓ)

மூலமுக் கோணத்தில் முட்டி யெழுந்ததை
மூக்குநுனி பார்த்து
முச்சுடரொழி யை
சதா விலகாதன்பு வை
சச்சுதா நந்தனே உந்தனை
தேசிகன் பணிந்தனே எந்தனை
வாசிதனிலேரிட வே
தேசோமயமோ என்னிடத் தோம்பிர
பரப்பிர்ம்மநு

———

R6 122
125891
600 009

ஆனந்தக்களிப்பு.

இராகம்-நாத நாமக்கிரியை-தாளம் சாப் மிஸ்ர ஜாதிநடை

எல்லாமவன் செயல் மானே அதை
எண்ணினால் கிட்டும்பரகதி தானே (எ)

கல்லிற்குட்டேரைக்குந் தானே கரு
வாகிய முட்டையுங் காத்தளிப் பானே
எல்லாவுயிரிலுள் ளானே ஆதி
இருக்க உனக்குப்பயமென்ன மானே (எ)

அன்னை வயற்றில் வைத் தானே அனு
வாகிய நீரை உறு சமைத் தானே
மனைவிட்டுப்போகச் சொன் னானே இந்த
மண்ணிற்பிறந்தபின் வளர்த்ததும வனே (எ)

மனுவுக்குள் மறைந்திருப்ப வனே வான
மலை கடலெங்கும் வகுத்தவன் றானே
நினைவுக்குள் நிதமிருப்ப வனே எங்கும்
நீதியாய் ராஜாங்கம் செய்வதும வனே (எ)

பெண்டுபிள்ளை பொருள்தந்தவன வனே அதில்
பிரியமாய்ச்சிலநாட்கள் வைத்திருந்த வனே
நினைந்தால் நிமிஷிமிருக் கானே அவனே
நினைக்காது நீயாயிருந்தால வனே (எ)

கொடுப்பதுமழிப்பதும வனே கோலம்
பலவாக ஓர் நொடியாக்கிடும வனே
படுக்கையும் சயனமில் லானே நாம்
பாத்தவிடமெல்லாம் நீறப்பமுள்ள வனே (எ)

ஒருக்காலுமறதியில் லானே ஊரும்
எரும்பானை முதலுணவழிப்பவன வனே
வெறுப்புச்சலிப் பொன்றி லானே மிகு
வெட்டும் படைகாக்கும் மேலவன வனே (எ)

என்றைக்குமழிவில்லா தவனே எல்லா
உயிரையுமழித்துப் பின்னெழுப்பவல் லவனே
தொண்டாக்குக் கிருபை செய் பவனே சொல்ல
தொலையாத சொரூபத்தின் வடிவுடையவனே (எ)

பரப்பிர்ம்ம நம:

ஆனந்தக்களிப்பு.

ஏன்காண் உனக்கிந்த பாடு வளர்
என் சாணுடையதல்லோவிந்தக் கூடு (ஏ)

நான் சொன்ன சொல்லைக்கொண் டாடு நீ
நாடியுற்று பார்த்தாலென்வரும் கேடு (ஏ)

ஊமையெழுத்தை நீ பாடு பாடி
யுன்னுள்ளே கண்டால்வருஞ் சொர்ண வீடு (ஏ)

எலும்பு நரம்புள்ள கூடு அதில்
எட்டொன்று மாங்கெட்ட பீத்தலை மூடு (ஏ)

குரும்பெலாம் நீ விட்டுப் போடு சுத்த
குணமான வெட்டவெளிச்சமே தேடு (ஏ)

அடியையுமுடியையும் நாடு அந்த
ஆசான் சொல்லைக் கெட்டியாய்ப்பிடித் தாடு (ஏ)

அரூபமாம் பெண்ணை நீ கூடு அவன்
அடிவந்தால் சுகமாய் வரும் முத்தி வீடு (எ)

கதிர்மதிரெண்டையுந் தேடு உந்தன்
காயமழியாத முன்னே நீ தேடு (எ)

கலையைப்பிடித்துக் கொண் டோடு கெட்ட
காட்டையெல்லாம் வெட்டிபோட்டு நீ தேடு (எ)

கிரிமேல் விளங்கிட நாடு அதின்
கிழேயிருக்கு மௌனகல் வீடு (எ)

செத்தால் கிடையாது தேடு சொன்னேன்
சின்ன வீட்டினுள் சீமானைத் தேடு (எ)

சொணையிருந்தால் நீரே கூடு நலம்
சொன்னேன் சுகமிது சுகமிது நாடு (எ)

கும்பகோணத்தொரு வீடு அதைக்
கூடாத பேர்க்குத் தொடர்ந்திடும் கேடு (எ)

தனக்குள்ளிருப்பதைப் பாடு அது
தாண்டிக்குதித்திடில் சாருமே கேடு (வ)

பரப்பிர்ம்ம நம:

ஆனந்தக்களிப்பு.

நினைவிற் றுருவதைப் போடு நின்ற
நிலைகண்டு பிடித்திடில் குணங்குடி வீடு. (நி)

கனவுபோலழிந்திடுங் கூடு காயஞ்
சதமென் றெண்ணி றுனக்கவ கேடு
நினைவல்லோ வழியில்லா வீடு நெற்றி
மூச்சுக்கு நடுவிலே பார்த்ததைத் தேடு (நி)

காடெற்கும் திரிவோர்கள் மாடு கட்டைப்
பனைக்குள்ளேயிருக்குது கருத்தாகத் தேடு
சோடு பிரிந்திடிற் கேடு சொல்லை
நம்பினை பேர்க்கல்லோ குணங்குடி வீடு (நி)

பாடு பட்டாக்கிட்டும் வீடு இதை
பாருக போர்க்கெல்லாம் மெத்தவாங் கேடு
மாடு போற்றிரிந்திடிற் கேடு மச்சு
வீட்டுக்குள்ளிருக்கிற மவுனத்தை தேடு (௬)

பித்தலென்பதை மூடு பிஞ்சு
போமுன்னே தேடினல் பேரின்ப வீடு
சாற்றை பிடித்துள்ளே போடு கார்க்கும்
கடமைகளுள்ளானை சவனித்துத் தேடு (௭)

பரப்பிர்ம்ம நம:

தானன அத்வித புகள்ச்சி.

பராபரக்கன்னி மேட்டு.

ஆனந்த ஆனந்தமே ஆனந்த ஆனந்தமே
ஆனந்த ஆனந்தமே ஆனந்த ஆனந்தமே

மும்மலத்தை வேரறுத்து முக்குணத்தைத் தள்ளியுமே
நிஷ்மலமாயாயிருந்தோ மென்றியம்பாய் நீ
[யானந்தமே

சதுர்மறையுங்தேடி ஜெகஜாலமாயிருந்த
பிதுர்கள் சென்றதையும் பிரிந்தோமேயானந்தமே

விதிதனையும் நீக்கி விலகாமலே நிறைந்து
மதிவிதிரெண்டையுமே மதித்தோமே யானந்தமே

விட்டகுறை வேண்டுமென்றே வெட்கியுமே நில்லாமல்
கிட்டப்போய்க் கண்டோமென வியப்பாய் நீ
[யானந்தமே

ஆதியந்தமற்ற யபேதமா மந்திரத்தை
கதிபெரவேகண்டு கலந்தோமே யானந்தமே

ஆராறுதானை யடுத்தடுத்துத் தள்ளிவிட்டு
பேராறு வெள்ளம் பெருகவிட்டோ மானந்தமே

காடுமலை யோடாமல் கங்கை நதி மூழ்காமல்
வீடுகிலேகண்டுமல்லோ விதித்தோமே யானந்தமே

பொறிபுலன்களோடாமல் போதமாய் நின்றதினல்
அறிவுடனே நானுமானந்தம் ஆனந்தமே

ஜாதி விகற்பத்தைச் சங்கையற தள்ளிவிட்டு
ஜோதிமயமானமென்று ஜொலித்துவிடா
[யானந்தமே

பூதபேத விகற்பமதில் பூதாமல் நீக்கிவிட்டு
அபேதமாய் நின்றமென அறைபாய் நீ
[யானந்தமே

சங்கை விகபற்பங்களைச் சாதித்தே தில்லாமல்
அங்கேயே ஞாபகமாயமர்ந்தோமே யானந்தமே

போதஞ்சிதராமல் பொருள்தானுய் நின்றதினுல்
அபேத சித்தமென யருளாய் நீ யானந்தமே

துறவிகள்கண்டு துலங்கும் மகமதுவாய்
திரவியத்தைக்கண்டு தெளிந்தோமே யானந்தமே

அசதிலே முகமதுவாய் ஆனந்தித்திருந்துவிட்டால்
மகமதுவாய் தானும் பிர்ம்மது யானந்தமே

காலாதீதமாய்க் களைந்துமேயிருந்து விட்டால்
கோலமது தீண்டாமல் கோணதுவே யானந்தமே

சிவயோகி ஜெகத்தைப்பாழாக்கி நிறைநதினால்
அவயோகிக்கியவன் அசிங்கமாம் ஆனந்தமே

கசக்கும் எட்டிக்கொட்டைக்குக்கமழ்நீரை விட்டாலும்
கசப்பதுவும் நீங்கி இனிக்குமோ யானந்தமே

பேசுங்கோக மொன்பதையும் பேதமையாய்த்
[தள்ளிவிட்டு
தேஜஸ் பழுத்திறண்டோமே யானந்தமே

பாவபுண்ணியத்தை பற்றறவே செய்துவிட்டு
மாயல்லச் சூடாமணியைப் பதித்தோமே
[யானந்தமே

விழியா மூடாவிடத்தில் விலகாதிருந்ததினால்
விஷபாகிதமாயெங்கும் விதித்தோமேயானந்தமே

கற்பகோடி காலமதை யற்பமாய் தள்ளிவிட்டு
    தற்போது காலமதாய் தானுனை யானந்தமே

நான்காம் வேதமதாய் நாடியே நின்றதினால்
    நாயகமேயுனை நாணடைந்தேனானந்தமே

அஞ்சிலே ஒன்றதாய் யாலத்திலே வந்ததினால்
    நெஞ்சிலே முகமதுவாய் யான் நினைந்தேனா
[னந்தமே

ஈன்னத்தானி துண்யா முழுவதுமாய்
    அன்[illegible]லே நாயகமாயமர்ந்தபதி யானந்தமே

பரப்பிர்ம்ம நம:

இராகம் எதுகுலகாம்பூதி.

ஆசிரிய விருத்தம்.

ஆதியாய்நின்றதேது அந்தமேது நடுவேது அங்கிங்கிலாததேது
எங்குமேது எப்பொருளுமேது

ஆணேது பெண்ணேது அலியபிமானமேது ஆனந்தமான
அருளேதுதெருளேது இறண்டுமிலாததேது [தேது

ஜோதியேது சுடரேது சுயம்பேது சுத்தநிற்மலமானதேது
சோதிக்கவந்ததேது சும்மாயிருந்ததேது

சொரூபமாய் நின்றதேது சூட்சியேது சுகமேது சுபாவமான
சொந்தமேது சொந்தமில்லாததேது [தேது

நீதியேது நேரமேது நீங்காநிறைந்ததேது நித்தியானந்தமேது
நீயேது நானேது நீக்கமற நின்றதேது

நிஷ்டையேது நிறைந்ததேது குறைந்ததேது குறையாததேது
நித்தியமேது அநித்தியமாயிருந்ததேது

ஜாதியெது சங்கையெது சமயமெது சத்துசித்தானமெது
சாதிக்கவந்ததெது சாற்றுநிருந்ததெது

சாட்சியெது சமமெது சமயத்திலுள்ளதெது சத்தியமெது
காட்சியெது கடாச்சமெது கருணையெது

பூதியெது பூதமெது பிரந்ததெது இரந்ததெது இருந்ததெது
போனதெது போகாமலிருந்ததெது

போகமெது போதமெது புனைவந்ததவுமெது
புர்த்தியிலுளுறவாகிப் பொலியவர்ந்ததெது

கோதிலாதெது கொண்டதெது கொடுத்ததெது கோளுகி
[நின்றதெது
கட்டமெது வாட்டமெது கூறத்தகாததெது

கோடான கோடியாய்க் குற்றமற்றெங்கினும் வல்லவொரு
[மித்திரமே
குவலயமெலாம் பெருவெளியாகிநின்ற பரமே
பரப்பிர்ம்ம நம:

அடி நான்காய் தம்மிலோத்துவந்த இரட்டைக்குறள்

வெண்செந்துறை.

வேதம்.

ஆதியந்தம் அற்றதெங்கள் அரூபமான வேதம்
ஜோதிமயமானதெங்கள் சோரமற்ற வேதம்
பேதா பேதமற்றதெங்கள் பெருமைபூண்ட வேதம்
வேதாதீத வேதமாய் விதித்ததெங்கள் வேதம்

அத்விதமாய் அமர்ந்ததெங்கள் ஆணவமற்ற வேதம்
தத்வானந்தம் பொங்குமெங்கள் ததாகார வேதம்
சித்துகளை தள்ளியெங்கள் சித்திபெற்ற வேதம்
சத்தசத்தும் விட்டதெங்கள் சதானந்த வேதம்

நிர்விகல்ப்பமதாயெங்கள் நின்றிலங்கும் வேதம்
நிர்மலமாய் நின்றதெங்கள் நேசமுற்ற வேதம்
சிற்பரமாய் சின்மயமாய் சேர்ந்ததெங்க வேதம்
தற்பரமாய் தன்மயமாய் தானானதெங்கள் வேதம

சுத்த நிஷ்கலங்கமதாய் துரியாதீத வேதம்
துய்ய மஹா மவுனமதாய் ஜோடித்திட்ட வேதம்
சுட்டேதற்ற ஜோதிமயம் ஜொலித்ததெங்கள் வேதம்
சூதானமதாயிருந்ததெங்கள் சூஸ்த்திர மஹா வேதம்

வேஷமொன்றும் பெட்டாதெங்கள் விமலமான வேதம்
தோஷமொன்றும் கெட்டதெங்கள் தொந்தமற்ற வேதம்
விஷயரகித சூஸ்த்திரமாய் விளைந்ததெங்கள் வேதம்
சூக்ஷமத்தின் சூக்ஷமமாய் சூதானதெங்கள் வேதம்

குற்றரகித பிராமணத்துவங்கொலிக்குமெங்கள் வேதம்
குறிக்கபெட்டா சூஸ்திரமாய் கூடினதெங்கள் வேதம்
கோதுவற்ற இஷ்பமதாய் குவிந்ததெங்கள் வேதம்
குரவனருள் பொங்கிக்கொஞ்சி குலாவுமெங்கள் வேதம்

பரப்பிர்ம்ம நம:

இதுவுமது.

பழக்கம்.

விட்டுதொட்டு விலகாதெங்கள் விபலபஹார பழக்கம்
வியர்த்தமற்று துலங்குமெங்கள் விழியாமூடா பழக்கம்
கட்டுகெட்டாகடந்ததெங்கள் கருத்திற்கணிந்தபழக்கம்
சவியும்பெல்லா சங்கற்பங்களை களைந்ததெங்கள் பழக்கம்

சலிக்கும்மாய்கை ரஹிதமெங்கள் சதானந்த பழக்கம்
சகுண உபாயங்களை சாராதெங்கள் பழக்கம்
பேசாவனுபூதிபுரிந்து பெருகுமெங்கள் மழக்கம்
போதராஜபட்டம்பெற்று பொருந்தினதெங்கள்பழக்கம்

துன்ருமன குரங்கைகட்டி சுட்டதெங்கள் பழக்கம்
வின்ரும்பொருளாய் விளக்கமற்று விதித்ததெங்கள் [பழக்கம்
விந்தை விநோதமற்றதெங்கள் விதேகமா பழக்கம்
வேதமெட்டா வித்தகமாய் விளைந்ததெங்கள் பழக்கம்

சுத்த நிர்விகல்பமதாய் தோந்ததெங்கள் பழக்கம்
அப்ப சுத்ததுரியா திதப் தோய்ந்ததெங்கள் பழக்கம்
தூயவுள்ளத்துரவுகொண்டு சுபம்பானதெங்கள் பழக்
நேயமுற்ற சகசமதாய் நேசித்ததெங்கள் பழக்கம் [கம்

வகுத்துவைத்த ஜாதிபேதம் வாதியாதெங்கள் பழக்கம்
தொகுத்துவைத்த பொய்ப்புராணங் கூடாதெங்கள்
நித்தியமாயுரைந்திலங்கும் நீக்கமற்ற பழக்கம் [பழக்கம்
சத்தியமாய்ப் பிர்மமென்றே சந்தேகந் தீர்ந்த பழக்கம்

காடுமலை யோடாமலே கண்டதெங்கள் பழக்கம்
தேடுவது தேட்டமற்றருளானதெங்கள் பழக்கம்
தெருளரும்பொருளுமதாய் சேர்ந்ததெங்கள் பழக்கம்
திருமூர்த்திக்கு மெட்டாதெங்கள் தீவிரமாம் பழக்கம்

இன்பதுன்பமற்றதெங்கள் ஈனகெட்ட பழக்கம்
இருந்தபடியே இருந்ததெங்கள் இன்பாதீத பழக்கம்
எல்லாமெங்கள் உள்ளே கண்ட ஏகமான பழக்கம்
ஏதுமில்லா சுத்தபிர்ம வெளியானதெங்கள் பழக்கம்

பரப்பிர்ம்ம நம:

பெருமை கூறல்

ஆதிபந்தமற்றிருக்கும் வெட்டவெளியே நானும்
அங்கேவர வேண்டுகிறேன் வெட்ட

ஜோதிமயமாயிருக்கும் வெட்டவெளியே என்னை
சோதித்துப் பார்க்கவேண்டாம் வெட்ட

சின்மயமாயிருக்கும் வெட்டவெளியே நான்
சிறியேன் மயங்குகிறேன் வெட்ட

பொறிபுலன்களோடமல் வெட்டவெளியே என்னை
போதமாகயிருத்தல்வேண்டும் வெட்ட

பார்க்கப் பலவிதமாய் வெட்டவெளியே நீயும்
பல்லுயிரும் ஆன்மாவாம் வெட்ட

ஆணுமற்று பெண்ணுமற்ற வெட்டவெளியே நீ
அரூபமாய் யெங்குமானாய் வெட்ட

துரியாதீதப் பொருளாய். வெட்டவெளியே நீ
தோந்தமே நின்றவனே வெட்ட

சூக்ஷமத்தின் சூக்ஷமமே வெட்டவெளியே நீ
சொல்லவொண்ணா ரகசியமே வெட்ட

நான்குமறைக்கெட்டாத வெட்டவெளியே நீ
காணமற்ற ஜோதிமயம் வெட்ட

பெண்டுபிள்ளை யொன்றுமில்லா வெட்டவெளியே நீ
பேரானந்தமானவனே வெட்ட

உண்டுரங்க விதியில்லை வெட்டவெளியே உன்னை
விள்ளவுமே வெட்கம் வெட்கம் வெட்ட

உரங்காத உரக்கமே வெட்டவெளியே என்
ஊனமற்ற வென்னுறவே வெட்ட

இல்லரம் துரவரமாய் வெட்டவெளியே நீயும்
இருந்துமே ஆடுகிறாய் வெட்ட

கண்ணுக்குள் மணியாகி வெட்டவெளியே என்
கருத்தாக நின்றிலங்கும் வெட்ட

பயிர் முளைத்துக்கெட்டாத வெட்டவெளியே உன்னை
பாவிக்கக்கூடாதே வெட்ட

நிர்விகல்பமாயிருக்கும் வெட்டவெளியே உன்னை
நிர்சிந்தையாய் காணவேணும் வெட்ட

பிர்மக்ஞான சூட்சமதாய் வெட்டவெளியே நீயும்
பிர்ம்மமயமாயிலங்கும் வெட்ட

தேறாத சிந்தையானால் வெட்டவெளியே நீயும்
தெருவிலே விட்டிடுவாய் வெட்ட

சங்கற்பங்கள் தீர்ந்துவிட்டால் வெட்டவெளியே நீயும்
சதானந்தமானவனே வெட்ட

போதிக்கவந்தவனே வெட்டவெளியே நீயும்
போதமயமாயிலங்கும் வெட்ட
தத்துவமசியெனும் வெட்டவெளியே அந்தத்
தானமதிலாகிர வெட்ட
நீயும் நானும் யேகமானோம் வெட்டவெளியே சத்யம்
இனிமேல் பிரியமாட்டேன் வெட்ட
இப்படியிருக்க நீயும் வெட்டவெளியே உன்னை
எப்படி பகரலாகும் வெட்ட
அடியார்க்கு அரிவுமயம் வெட்டவெளியே சத்த
அரிவுமயமாயிலங்கும் வெட்ட
அகம்பிர்ம்மம் நானென்று வெட்டவெளியே நீயும்
ஆத்ம நிஷ்டைசெய்யுமென்றாய் வெட்ட
பாவ புண்ணியமற்றவர்க்கு வெட்டவெளியே நீயும்
தேவாமிர்தமானவனே வெட்ட
இருளும் வெளியுமில்லா வெட்டவெளியே அகண்ட
கம் அரிவுமயம் வெட்ட
ஆனந்தம் ஆனந்தமே வெட்டவெளியே பிரம்
மானந்தம் ஆனந்தமே வெட்ட

பரப்பிர்ம்ம நம:

இம்பீரியல் பிரஸ், மதுரை. 22.

125891

இந்நூல் இயற்றிய மௌன சுவாமிகளின் போட்டோ படம் ஆப்டோன் பிளாக்கில் சுத்தமான வேலை செய்யப்பட்டது. தேவையுள்ளவர்கள் அடியில்கண்ட விலாசத்திற்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்பினால் போஸ்டு மூலமாய் அனுப்பப்படும்.

N. சுப்பையா செட்டியார்.

புரோப்ரைட்டர்,

இம்பீரியல் பிரஸ், மதுரை.